# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 9 ஆகஸ்ட் 2024



## விநாயகர் சதுர்த்தி சிறப்பிதழ்

# உங்கள் கனவு இல்லம்
# இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

1 இலட்சம் சீட்டு

முதல்

1 கோடி சீட்டு

வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்




எங்களின் வெற்றிப்பயணத்தில்
மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

**பதிவு அலுவலகம்:**
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474


**நிர்வாக அலுவலகம்:**
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

**மத்திய அலுவலகம்:**
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்




GET IT ON Google Play

## வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 9 ஆகஸ்ட் 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**ஆலோசகர்**

நா.சோமசுந்தரம்

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல் , ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி ! இன்னும் சில தினங்களில் விநாயகர் சதுர்த்தி வரவிருக்கிறது. அதைச் சிறப்பிக்கும் வகையில் இந்த இதழ் " விநாயகர் சதுர்த்தி " சிறப்பிதழாக மலருகிறது.

இந்துக்களின் எல்லாவிதமான தெய்வ வழிபாடுகளுக்கும் மற்றும் எந்தவொரு முக்கியக் காரணமானாலும், சுபகாரியங்கள் ஆனாலும் விநாயகர் வழிபாடு தான் முதல் இடம் பெறுகிறது. இது தமிழகத்திற்கு மற்றுமின்றி, உலகில் உள்ள எந்தவொரு மூலையில் வாழும், இந்து மக்கள் விநாயகர் வழிபாடே முதன்மையாகக் கொண்டார்கள்.

இவ்வுலகில் உள்ள பல்வேறு மதங்கள், தெய்வங்கள் என இருப்பினும், மதங்களைக் கடந்து, அனைத்து மக்களுக்கும் பிடித்தமான ஒரு தெய்வம் என்றால் விநாயகர் தான். அந்த விநாயகர் அவதரித்த நாளை கொண்டாடும் தினம் தான் விநாயகர் சதுர்த்தி ஆகும்.

விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரை வழிப்படும் முக்கிய விழாவாகும். இது இந்துக்கள் மற்றுமின்றிப் பல்வேறு மதத்தினர் கொண்டாடும் ஒரு விழா ஆகும். ஒவ்வோர் ஆண்டும், தமிழ் மாதம் ஆவணி, வளர்பிறை சதுர்த்தி அன்று, விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த வருடம் விநாயகர் சதுர்த்தியானது 07.09.2024 அன்று வருகிறது.

நம் தமிழகத்தில் அனைவராலும் விநாயகர் சதுர்த்தி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பட்டித்தொட்டியெங்கும் பந்தல்கள் அமைத்து, விநாயகர் சிலைகளை நிறுவி பூஜைகளைச் செய்வார்கள். விநாயகர் பூஜைக்குக் கொழுக்கட்டை, சுண்டல், பொரி, பழங்கள், அருகம்புல் நைவேத்தியம் வைத்து சிறப்பிப்பார்கள்.

இந்தியா, ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்த காலத்தில், அன்றைய இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பாலகங்காதரத்திலகர் (1856 – 1920) தகடுஷேத் ஹல்வாயி கணபதி கோவிலில், விநாயகர் சதுர்த்தியில் போராட்டத்தைத் தொடங்கினர். அன்று பெரிய பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் விநாயகரை அமைத்து ஊர்வலத்தைத் தொடங்கினர். அதில் ஆங்கிலேயருக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டு, மக்களிடம் தேசியம் வளர ஊக்குவித்தார்.

பிற்காலத்தில் மராட்டிய மக்கள், தங்களுடைய கலாச்சார விழாவாகவும், குடும்ப விழாவாகவும் கொண்டாடத் தொடங்கினர். விநாயகர் சதுர்த்தியன்று, அங்குள்ள மக்கள் தங்களுடைய வசதிக்கேற்ப விநாயகர் சிலைகளை வைத்து கொண்டாடுகின்றனர்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தெய்வமான விநாயகரை வழிபடுவது மிகவும் எளிதானது. பூஜையைத் தொடங்கும்போது விநாயகரின் திருவுருவமோ, விக்கிரகமோ இல்லாமல் போனாலும் மஞ்சளில் ஒரு கூம்புபோலப் பிடித்து வைத்து அதையே பிள்ளையாராக நினைத்து பூஜையைத் தொடங்கலாம். விநாயகர்பெருமான் பூஜைக்குச் சிறப்பான பொருட்கள் என்று எதுவுமில்லை. அருகம்புல் அபிஷேகம் மற்றும் நிவேதனம் செய்வதிலேயே, ஆனந்தப்பட்டு ஏற்றுக்கொள்வார்

விநாயகர் பிறந்த நாளான, இந்த அற்புதமான நாளில் தும்பிக்கையானை நம்பிக்கையுடன், வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கிடைத்து சிறப்பாக வாழலாம்.

கேட்டதையெல்லாம், கேட்டபடியே கொடுக்கும், விநாயகப் பெருமானின் பிறந்தநாளை கொண்டாடுவோம். அவரது அருளும், ஆசியும் பெற்று நலமுடன் வாழ்வோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just
a single charge

LECTRIX



Book Your TEST DR!VE Now!!

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- நேரம் நம்மை ஆள்வதா? – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. ................12

**கவிச்சோலை**

- இரு துருவம் –ஆர்.எம். சண்முகம் செட்டியார் ..........................19
- ஆனைமுகன் அருட்பா..!!! – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர்.............40
- ரயில் வண்டி –கவிஞர் எம்.சோலை காரைக்குடி. ..........................54

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் ......................21

**பக்தித் தொடர்**

- ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – புலவர் த.கோவேந்தன், டி. லிட் ...... 27

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ...........29

**பங்குசந்தை**

- ஐ பி ஓ செய்திகள் –கார்த்திக் முத்தப்பன் நகரத்தார் கேப்பிட்டல்.............31

**ஆன்மிகம்**

- மோதகத்தின் தத்துவம் .............................................39
- வினைகள் தீர்க்கும் விநாயக சதுர்த்தி ..................................42
- நைவேத்திய பிரியர் ...............................................55

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA ..........41

**சமூகம்**

- நம் நகரத்தார் – செயலாற்றல் திறன்படைத்த சேவாரத்னா ஏ.ஆர்.ஆர். ........ 45

**சமையல்**

- வெங்காய வேர்க்கடலை சட்னி.................................... 56

**உணவே மருந்து**

- தினம் ஒரு கொய்யா பழம்....................................... 59

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ........... 64

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி கன்னி லக்னம்..! – ஜோதிடர் எல்லி........................80

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

உ

VALATHI
Since 2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/- முதல்**
**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பல்லாண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064,80
3569950,7968005.

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-145D, NVV கேஸ்டில் முதல் தளம்
6வது கிராஸ் கிழக்கு, தில்லைநகர்.
திருச்சிராப்பள்ளி 620 018
தொடர்புக்கு: 94878 85143, 90809 78057,
0431-2760064,

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# நாட்டுக்கோட்டை நகரத்தார் அமைப்பு,

# அபுதாபி

## நகரத்தார் மாணவ/ மாணவிகளுக்கான கல்வி உதவி

இளங்கலை

மாணவ / மாணவிகளுக்கு மட்டும்

கீழ்காணும் முகவரியில் விண்ணப்பிக்கலாம்

இணையத்தளம் (Website) - **www.nnaeducation.com**

## நாள் 31-08-2024 வரை

மேலும் தகவல்கள் மற்றும் சந்தேகங்களுக்கு பின்வரும் மின்னஞ்சலைத் தொடர்பு கொள்க

**education.nna@gmail.com**

**தேவையான ஆவணங்கள்:**

1. Recent Mark sheets 2. Receipt Fees Paid for 2023-24 3. Recommendation Letter from Nagarathar Sangam/Kovil or Referred by NNA member 4. Income Certificate or Proof of Income 5. Bank Account Details – Bank Passbook Details 6. Applicant Passport size Photo.

# நேரம் நம்மை ஆள்வதா?



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

அலுவலகம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவரை, அவசரமாக அழைத்தார் அலுவலக மேலாளர். பதற்றத்தோடு மேலாளர் அறைக்குள் சென்றார் ஊழியர். அங்கு அமர்ந்திருந்த மேலாளரும் ஏதோ ஒரு வித பதற்றத்தோடே காணப்பட்டார்.

தன் அறைக்குள் நுழைந்த ஊழியரைப்பார்த்தவுடன்,
"என்ன கணேசா,காலையில் நான் எடுக்கச்சொன்ன, பொருட்களின் இருப்புப் பட்டியலை (STOCK TAKING) எடுத்து விட்டிர்களா? ஏன் அதை என் மேசையின் மீது வைக்கவில்லை? முதலாளி என்னை போனில் கூப்பிட்டு இன்னும் எனக்கு ஏன் இருப்புப்பட்டியல் தரவில்லை என்று சத்தம் போடுகிறார்? என்றார்.



கணேசன் சற்று திகைத்தவாறு,"சார் அதை எடுக்க எனக்கு எங்கே சார் நேரம்? நீங்கள் எனக்கு பல வேலைகளைக்கொடுத்து, அவசரம், அவசரம் என்பீர்கள்,அதனால் எந்த வேலை அவசரம்? எதை முதலில் முடிப்பது? எனத் தெரியாமல் நான் வேலை செய்கிறேன்." என்றார்.

"வேலை செய்ய நேரமே போதவில்லை!" சார் என்றார். அதற்கு மேலாளர் நான் கேட்கும் போதெல்லாம் வேலை செய்ய நேரமேயில்லை என்றால்,அலுவலக நேரத்தில் என்னதான் வேலை பார்க்கிறீர்கள்? என்று கோபத்தோடு கேட்டார்.

உனக்கும், எனக்கும் மற்ற எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தான் உள்ளது. அதற்குள் தான் நாம் அனைவரும் நமது வேலைகளைப் பார்க்க வேண்டும். "உனக்காக ஒரு நாளைக்கு 36மணி நேரம் என்றா நாம் இனி மாற்ற முடியும்?" என்றார் கோபத்தோடு மேலாளர்.

இது போன்ற காட்சிகள் எல்லா தனியார் அலுவலகத்திலும், தொழிற்சாலைகளிலும், அரசாங்க அலுவலகத்திலும் நடைபெறுவது உண்டு.

வாழ்க்கையில் நாம் நினைத்த செயல்கள் நடைபெறவும், நமது திட்டங்கள் வெற்றி பெறவும் நமக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது நேரமாகும். அந்த நேரத்தை நாம் சரியாகப்பயன் படுத்துகிறோமா? என்பதுதான் ஒவ்வொருவர் முன்பும் உள்ள கேள்வியாகும்.

கணேசன் சற்று திகைத்தவாறு,"சார் அதை எடுக்க எனக்கு எங்கே சார் நேரம்? நீங்கள் எனக்கு பல வேலைகளைக்கொடுத்து, அவசரம், அவசரம் என்பீர்கள்,அதனால் எந்த வேலை அவசரம்? எதை முதலில் முடிப்பது? எனத் தெரியாமல் நான் வேலை செய்கிறேன்." என்றார்.



வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு "நேரம்" என்பது ஒரு இன்றியமையாத காரணமாகும். நமக்குக் கிடைக்கும் நேரங்களை வெற்றி பெறுவதற்கு கிடைத்த நல்வாய்ப்பு என்று நாம் எடுத்துக் கொண்டால் மட்டுமே நம்மால் எதையும் சாதிக்க முடியும்.

நமக்குக்கிடைத்த நேரத்தை சரியாகக் கையாளும் திறமை நமக்கிருந்தால், நமது உடலும்,மனமும் நலம் பெறும். இதனால் நாம் சிறப்பாகச்செயல்பட உற்சாகத்தையும் அது தரும். இதனால் நம்முடைய தினசரி வேலைகளில் கவனம் செலுத்த இயலும்.

நம்முடைய கவனம் ஒருமுகப்படுத்தப்படும் பொழுது, நேரத்தை வீணடிப்பதற்கோ அல்லது நேரமில்லை என்று சொல்வதற்கோ நம்மால் இயலாது.

நமக்கு இயற்கையால் கிடைத்துள்ள விலைமதிக்க முடியாத ஒரு சொத்து, "நேரம்" என்பதை மறந்து விடக்கூடாது. அந்தச் சொத்தை எந்த முறையில், எந்த வழியில் நாம் பயன் படுத்த வேண்டுமோ அந்த வழியில் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும்.



நம்மிடம் உள்ள வேறு சொத்துக்களைப்போல "நேரம்" என்கின்ற சொத்தை நினைத்துவிட வேண்டாம். வாழ்க்கையில் வேறு சொத்துக்களை நம் தவற்றால் இழந்துவிட்டால் கூட, மீண்டும் நம்பிக்கையோடு போராடி மீண்டும் ஈட்டிவிட முடியும்.

ஆனால் நேரம் என்ற சொத்தின் அருமையை உணராமல், அதை வீணாகச் செலவழித்துவிட்டால், அதை நீங்கள் எந்த வழியில் போராடினாலும் மீட்டு எடுக்க முடியாது என்பதை மனதிலே நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் நேரத்தின் அருமையும், பெருமையும் நமக்கு விளங்கும்.

நமக்குக் கிடைத்த நேரத்தை நாம் பிரித்துக்கொண்டு செயல்பட முனைய வேண்டும். அதனால் நம்முடைய "கவனச்சிதறல்" நம்மை விட்டு நீங்கும். காலை முதல் இரவு வரை நமக்குள்ள வேலைகளை அட்டவணை இட்டு,அதன்படி செயல்பட்டால் வேலைகளை சுலபமாக நிறைவேற்ற முடியும். இதன் காரணமாக எந்தப்பணியும் விடுபடாமலும், தடையின்றியும் நிகழவும், சிறப்பாகச்செயல்படவும் இயலும்.

தினசரி உணவு சாப்பிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் கண்டிப்பாக உணவினை உட்கொள்ளுங்கள். அது உங்களின் உடல் நலத்திற்கு துணை செய்யக்கூடிய ஒன்றாகும்.

நேர நிர்வாகத்தை நீங்கள் உங்களின் தொழிலில் அவசியம் கடைபிடிக்க வேண்டும். "நேரநிர்வாகம்" எங்கு திறமையாகப்பயன் படுகிறதோ, அந்தத் தொழிலில் இழப்பினைக் குறைக்கலாம், தொழிலில் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கலாம், உற்பத்தியைப் பெருக்கலாம், லாபத்தின் அளவை அதிகமாக்கலாம்.


மிக முக்கியமாக தொழிலாளர்களின் பணிச்சுமையைக் குறைக்கலாம். தொழில் விரிவாக்கத்திற்கு திட்டமிட நேரநிர்வாகம் பெரிதும் ஊக்கத்தைத்தரும்.



எதற்கும் எனக்கு "நேரம் இல்லை!" என்று வாழ்க்கை முழுவதும் ஒருவர் சொல்லிக்கொண்டே இருந்தால், அவருக்கு மட்டும் ஒரு நாளைக்கு ஐம்பது மணி நேரம் கொடுத்தாலும் போதாது என்றுதான் வார்த்தை வரும்.

எனவே நம்மிடமுள்ள நேரத்தை நல்ல முறையில் திட்டமிட்டு, தேவைக்கேற்றபடி, நேரத்தை நாம் தான் ஆள வேண்டுமே தவிர, நேரம் உங்களை ஆளவிடக்கூடாது. அதற்கு ஏற்றபடி வாழ்க்கையில் நீங்கள் மிகக்கவனமாகச் செயல்பட்டால், நேர நிர்வாகத்தை கையாளும் திறத்தை வளர்த்துக் கொண்டால், நீங்களும் வாழ்க்கையில் ஒரு வெற்றியாளராகத்தான் திகழ்வீர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



**PL RAMANATHAN (KANDANUR)**

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ **To take care of Childresn's Education**
- ★ **To Create Corpus for Child' marriage**
- ★ **To Create Corpus for Retirement Expenses**
- ★ **To save your Taxes at the time of Investment & Maturity**

**LIFE INSURANCE CORPORATION OF INDIA**

**Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.**
**Tel.: (O) 2345 1530 (M) 99401 32132**
**E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com**

LIC **LIFE INSURANCE CORPORATION OF INDIA**

# இரு துருவம்

கெஞ்சுவதில் ஓரின்பம்.
மிஞ்சுவதில் ஓரின்பம்.
அடிபணிவதில் ஓரின்பம்
ஆட்கொள்வதில் ஓரின்பம்

அர்ப்பணிப்பதில் ஓரின்பம்
ஆக்கிரமிப்பதில் ஓரின்பம்.
அடங்கிப்போவதில் ஓரின்பம்
அத்துமீறுவதில் ஓரின்பம்

வயப்படுவதில் ஓரின்பம்
வயப்படுத்துடுவதில் ஓரின்பம்.
அணைவதில் ஓரின்பம்.
அணைப்பதில் ஓரின்பம்

அளிப்பதில் ஓரின்பம்
அடைவதில் ஓரின்பம்
வழிவிடுவதில் ஓரின்பம்
ஊடுருவுவதில் ஓரின்பம்

இருதுருவங்களுக்கும் இன்பம்.
இருபாலாருக்கும் இன்பம்.
இது வாழ்வின் சங்கமம்.



–ஆர்.எம். சண்முகம் செட்டியார்
சண்முகநாதபுரம்



# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

## Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

### Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 9



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குச் சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்... வாங்க பேசலாம்..!**



### அம்பலம்

"ஏழை சொல் அம்பலமேறுமா?" என்று வசதிக் குறைவானவர்கள் பேசுவது பொது அவைகளில் எடுபடாது என்பதைக் குறிக்க நம்மவர்கள் அதிகம் பயன்படுத்தும் பழமொழி. இங்கு அம்பலம் என்பது அம்புதல் என்ற சொல்லிருந்து உருவானது. அம்புதல் என்பதற்கு கூடுதல் என்பது பொருள். அம்புதல் – அம்பல் – அம்பலம் என்றானது. அம்பலம் என்ற சொல்லுக்கு பொது அவை எனப் பொருள்கொள்ளலாம்.

## அம்மாடி/அம்மாடியோ

அம்மாடி, அம்மாடியோ என்ற சொற்களை இன்று கூட நாமும் நம் பிள்ளைகளும் அடிக்கடி பயன்படுத்தி வருகிறோம். "அம்மாடியோ எவ்வளவு பெரிய கத்திரிக்காய்" என்று ஹைபிரிட் கத்திரிக்காய்களைச் சந்தையில் வாங்கி வந்தவுடன் வியந்து பேசுவோமல்லவா? இந்த அம்மாடி/ அம்மாடியோ என்பவை 5 குறிப்புகளின் போது பயன்படுத்தப்படுகின்றன.

1.வியப்புக்குறிப்பு – அம்மாடியோ! எவ்வளவு பெரிய மலை
2.அச்சக் குறிப்பு – அம்மாடியோ! எவ்வளவு பெரிய பாம்பு
3.இரக்கக் குறிப்பு – அம்மாடி! இவ்வளவு அழகான பெண்ணுக்கு ரெண்டு கண்ணும் இல்லையே!
4.நோவுக் குறிப்பு – அம்மாடி! வயித்த வலி தாங்க முடியலயே!
5.இளைப்பாற்றற் குறிப்பு – கனத்த சுமையை தலையிலிருந்து இறக்கி விட்டு "அம்மாடி" என அமரும்போது கூறுதல்.

## அம்மி

"நீ என்னதான் மிக்சியில தொவையல் அரச்சாலும், எங்கம்மா அம்மியில அரச்ச தொவையலுக்கு ஈடாகுமா? என்று பேசிவிட்டுத் திட்டு வாங்கிய கணவன்மார்களைப் பார்த்திருப்போம். அம்மிக்கும் நகரத்தார் பெருமக்களுக்கும் அதிகத் தொடர்புண்டு. முன்பெல்லாம் சீர்வரிசைச் சாமான்களில் பல அளவுகளில் இவை இடம் பெற்றிருக்கும். இன்று அவற்றில் பல வீடுகளின் மூலைகளில் தூசு படிந்து கிடக்கின்றன. அந்த அம்மி என்னும் சொல் அம்முதல் – அமுக்குதல், அமுக்கி அரைத்தல் என்னும் சொல்லடியாகப் பிறந்தது. அம்+இ =அம்மி என்றாயிற்று. தன் மீது வைக்கப்படும் பொருளை அமுக்கி அரைப்பதால் அம்மியாயிற்று.

## அம்மா பாத்திருக்கு

"ஆத்தா தங்கச்சிக்கு அம்மா பாத்திருக்கு, வீட்டு வாசல்ல வேப்பிலக் கொத்த சொருகி வையி" என்று கூறும் ஆயாக்கள் இன்றும் உண்டு. அம்மை என்னும் இந்நோயின் பெயர், அம்மை என்றழைக்கப்படும் காளியின் பெயரிலிருந்து ஏற்பட்டது என்பர்.

கடலால் அழிக்கப்படாத குமரிக்கண்டம் இருந்த போதே இந்நோய் தோன்றியுள்ளது. வெப்பக் காலத்தில் பாலை நிலத்தில் வசிக்கும் பாலை நிலத்தவரை இந்நோய் தாக்கிய போது அது அவர்களது தெய்வமாகிய காளியம்மையால் (கொற்றவை) உண்டான தென்று கருதி அதற்கு "அம்மை நோய்" என்று பெயரிட்டதாகக் கூறுவர்.

## அம்மைப்பால் குத்தியிருக்கா?

"எங்க, உன் கையக் காட்டு? அம்மைப்பால் குத்தியிருக்கானு பார்ப்போம்" என்று 80 kids பேசுவதைப் பார்த்திருக்கலாம். அக்காலகட்டத்தில் பிறந்தவர்களின் கைகளில் இத்தழும்பைப் பார்க்கலாம். வட்டவடிவில் அத்தழும்பு இருக்கும். இதற்கு அம்மைப்பால் குத்துதல் என்பர். பசுவின் அம்மைக் கொப்புளத்திலிருந்து எடுத்த பாலை அம்மை நோய் தாக்கதவாறு மனிதர்களின் உடம்பில் ஊசியின் மூலமாகச் செலுத்துவது அம்மை குத்துதல் அல்லது அம்மைப்பால் குத்துதல் என அழைக்கப்படுகிறது.

## அமுக்கு

"சோத்த தூக்குச் சட்டியில நல்லா அமுக்கி அமுக்கி வையி, வளர்ர பிள்ள நல்லா சாப்பிடட்டும்" என்பதில் அமுக்கு என்பது அழுத்துதல் என்ற பொருளைத் தருகிறது. அமுங்கு என்னும் சொல்லே அமுக்கு என்னும் சொல்லாயிற்று.

### அழுக்குணி

"யாரு?கணேசனா! அவன் சரியான அழுக்குணிப் பயலாச்சே! வாயத் திறக்க மாட்டான்" என்று கூறுவது நம் பகுதியில் அதிகம். அழுக்குணி என்னும் சொல்லுக்கு எந்த எதிர் வினையும் காட்டாதவன் என்று பொருள் கொள்ளலாம்.

### அரசாணி

"இவ பெரிய அரசாணி! சொல்ல வந்துட்டா!" என்று சண்டைகளில் பேசப்படுவதுண்டு. அரசாணி என்ற சொல்லுக்கு அரசி என்பது பொருள். ராஜ்ஞீ (இராணி) என்ற வட சொல்லின் திரிபைப் பின்பற்றி அரசாணி என்ற சொல் உருவாகியிருக்கலாம் என்பர்.

தொடர்ந்து பேசுவோம்…..

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram



## கிருபானந்த வாரியர்

### அமுத மொழிகள்

சிலர் எதற்காகப் பேசுகிறோம், சிலர் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் பேசுகிறோம் என்று வரை முறையில்லாமல் பேசி விடுகிறார்கள். இதனால் எந்த ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை. ஆகவே, முடிந்த வரை அமைதியாக இருங்கள்.

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# வாழ்த்தி மகிழ்வோம்...!!!





சிவகங்கை மாவட்டம் கண்டரமாணிக்கம், தெற்குப்பட்டு, அருள்மிகு மாணிக்க நாச்சி அம்மன் திருக்கோவிலில் 07-08-2024 அன்று மாலை நடைபெற்ற விழாவில், உலகம் முழுவதும் தமிழ் மணம் பரப்பி வரும் தேவகோட்டை இராமநாதன் அவர்களது தமிழ் இலக்கியம் மற்றும் ஆன்மிகப் பணியைப் பாராட்டி, பிள்ளையார்பட்டி 'விகாஸ் ரத்னா' சிவஸ்ரீ A.பிச்சை சிவாச்சாரியார் அவர்களால், சேது பாஸ்கரா கல்வி நிறுவனங்களின் தாளாளர் டாக்டர் சேது குமணன் அவர்களின் வாழ்த்துடன், கோவை நீதிபதி திருமதி மோகனாம்பாள் அவர்கள் பட்டயச் சான்றிதழ் வழங்க, அம்பிகை சந்நிதியில், உலகத் தமிழ்ப் பறவை எனும் பட்டமும், ஒரு இலட்சம் ரூபாய் மாணிக்கப் பொற்கிழி விருதும் வழங்கப் பெற்றது.

அன்னாரது தமிழ்ப்பணி மேலும் உலகம் முழுதும் பரந்து சிறக்க நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறோம்.

ஏட்டில் இல்லா மகா பாரதக் கதைகள் – 28



# காய்ந்த விறகு ஈந்த ஈர நெஞ்சன்

– புலவர் த.கோவேந்தன், டி. லிட்

ஒரு நாள் ஒர் இரவலன் கர்ணனிடம் வந்து "ஐயா! ஒருவார்மாக மழை பெய்து கொண்டே உள்ளது. வீட்டில் அரிசியிருந்தும் பொங்குவதற்கு விறகு இல்லாமையால் பட்டினி கிடக்கின்றோம். காய்ந்த விறகு சிறிது கொடுத்தால் உதவியாக இருக்கும்" என்று வேண்டினான்.

கர்ணன் அங்க நாட்டு அரசன். அரசன் அரண்மனையில் விறகு இருக்குமா?ஆயினும் "இல்லை" என்ற சொல்லை அறியாத கர்ணன், அந்த இரவலனுக்கு எப்படி உதவலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

அருகிலிருந்த நண்பர் ஒருவர் "கர்ணன், இந்த இரவலனுக்கு இல்லை என்று சொல்வதைத் தவிர வேறு வழிஇல்லை. இல்லை என்று சொல்லத்தான் போகின்றான்" என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

ஆனால், கர்ணன் அந்த நண்பரின் நினைவைப் பொய்யாக்கிவிட்டான்.



அரண்மனைத் தாழ்வாரத்தில் போட்டிருந்த கை மரங்களில் சிலவற்றைப் பிரித்தெடுத்தான். நன்கு காய்ந்திருந்த அவற்றை அந்த இரவலனுக்குக் கொடுத்தனுப்பினான்.

அதைக் கண்ட நண்பர், வள்ளல் தன்மைக்கு ஒருவன் என்று உலகம் கர்ணனைப் பாராட்டுவது சரிதான் என்று எண்ணி விடை பெற்றார்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 9



# புரியாத புதிர்

– சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

**கணவனைப் புரிந்து கொண்ட மனைவிக்குத் தெரியும், அவன் வெளிப்படுத்தும் கோபத்தை விட அவன் உள்ளடக்கிய பாசம் அதிகம் என்று...**



ஒரு பெண்ணுக்கு மிகப் பெரிய வலி பிரசவ வலியன்று; கணவன் தன்னைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதே..

பெண் அன்பில் ஒரு தாய் ;
அழகில் ஒரு தேவதை ;
அறிவில் ஒரு மந்திரி ;
ஆதரவில் நல்ல உறவு :
வெறுப்பை நீக்கும் நெருப்பு:
வெற்றிக்கு ஒரு மலை:
நட்பில் நல்ல நேர்மை :
கண்டிப்பில் நல் ஆசிரியை:
இருந்தாலும் ஆண்களுக்குப் புரியாத புதிர்.

திருமணத்திற்கு முன் 'செல்வி' ஆக இருந்த மனைவி திருமணத்திற்குப் பின் 'திருமதி' ஆகி விடுகிறாள், ஆனால் திருமணத்திற்கு முன் திரு வாக இருந்த ஆண் திருமணத்தின் பின் 'திரு திரு' எனவாகிப் பாதை தெரியாமல் பயணப்படுகிறான்.

நமது தெய்வங்களே மனைவியுடன் இருக்கும் போது பாதுகாப்பிற்கு ஆயுதத்தைக் கையில் ஏந்தியுள்ளதாகத் தெரிகிறது.



பார்வதியுடன் சிவனிருக்கும் போது கையில் சூலத்தைத் தாங்கியுள்ளார், லஷ்மியுடன் விஷ்ணு இருக்கும் போது கையில் சக்கரத்தைச் சுழற்றியபடியே உள்ளார். ராமன் சீதையோடு காணப்படும் போது வில்லோடு வலம் வருகிறார், ஆனால் கண்ணன் மட்டும் ராதையுடன் இருக்கும்போது புல்லாங்குழல் வைத்துள்ளான். காரணம் காதலியோடு இருக்கும் போது எளிய ஆயுதமே போதும் என எண்ணியிருக்கலாம்.

புரியாத புதிர்களாக இருக்கும் பெண்ணின் மனதைப் புரிந்துக் கொண்ட ஆடவன் உலகில் இன்னும் பிறக்கவில்லையே. அடங்கிப் போகிறான் அல்லது அதிகாரம் செய்கிறான். இயற்கையில் அவன் படைப்பு அப்படி. மாற்றுவது எப்படி? பெண் ஒரு புரியாத புதிர்.

# ஐ பி ஓ செய்திகள்

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) எழுதும் இந்தப் பகுதியில் ஐ பி ஓ வெளியீடு / குறித்த செய்திகளை அறியலாம்.



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்


## ஐபிஓ என்றால் என்ன?




ஐபிஓ என்பது INITIAL PUBLIC OFFERING என்பதன் சுருக்கம். அதாவது, ஒரு நிறுவனம் தனது நிறுவனத்தின் பங்குகளை பங்குச்சந்தையில் பட்டியலிட்டு விற்பனை செய்ய முன் வரும் ஒரு நடவடிக்கை. இதனால், அந்த குறிப்பிட்ட நிறுவனம், ஒரு பொது நிறுவனமாக மாறுகிறது. அவர்கள் புதிய பங்கு வெளியீட்டை கொண்டு வந்த உடன் அந்த நிறுவனம் இந்திய பத்திரங்கள் மற்றும் பங்குச்சந்தை பரிவர்த்தனை வாரியம் நிர்ணயித்த வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை உருவாகும்.

இவ்வாறு விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு, புதிய பங்கு வெளியீட்டின் மூலம் முதலீடு திரட்ட விண்ணப்பித்து, அதற்கு அனுமதி வழங்கப்படும் போது, பங்குச்சந்தையில் இருந்து அந்த நிறுவனம் நிதியினை திரட்ட முடியும்.

## ஒரு IPO எவ்வாறு வேலை செய்கிறது?




புதிய பங்கு வெளியீட்டு நடைமுறையை செயல்படுத்த அடிப்படை தேவைகள் என்று சில விஷயங்கள் பின்பற்றப்பட வேண்டும். புதிதாக பங்கு வெளியிடும் நிறுவனம், ஒரு முதலீட்டு வங்கியை நியமிக்க வேண்டும். அந்த முதலீட்டு வங்கி, அந்த நிறுவனத்தின் சாதக பாதகங்களை ஆராய்ந்து அதற்கான அறிக்கையை தயார் செய்யும். மேலும், பங்குச்சந்தைக்கு வரும் அந்த நிறுவனத்தின் பங்கு எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யலாம் என்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் முடிவு செய்யப்படும். பங்குகளை வெளியிடும் நிறுவனமும் முதலீட்டு வங்கியும் சேர்ந்து, நிதி விவரங்களை ஒரு அறிக்கையாக தயார் செய்து, இந்திய பங்குச்சந்தை வழிகாட்டு ஆணையமான செபியிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஆராயப்பட்டு, இந்த நிறுவனம் பங்குச்சந்தையில் நிதியை திரட்ட தகுதி உடையதா என்பதை பங்குச்சந்தை வழிகாட்டு ஆணையம் முடிவு செய்யும்.

தகுதி உள்ள நிறுவனம் என்று முடிவு செய்யப்படும் பட்சத்தில், பங்குகளின் பெற முதலீட்டாளர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிப்பு வெளியிடப்படும். பின்னர் பங்குகளை சந்தையில் பட்டியலிட ஒரு குறிப்பிட்ட தேதியை பங்குச்சந்தை வழிகாட்டு ஆணையம் வழங்கும். சில நிறுவனங்கள் புதிய பங்குகளை வெளியிடும் போது அதற்கு நல்ல வரவேற்பு கிடைக்காது, அதனால், சில நிறுவனங்கள், குறிப்பிட்ட சில காலம் காத்திருந்து மீண்டும் ஒரு முறை புதிய பங்கு விற்பனை வெளியீட்டை அறிவிக்கும். அந்த குறிப்பிட்ட கால இடைவெளியில், அந்த நிறுவனம் முதலீட்டாளர்களை தேடிப்பிடிக்கும் அல்லது தங்களுடைய நிறுவனம் குறித்த சாதகமான சூழ்நிலையை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

## ஏன் ஐபிஓ வெளியீடு செய்ய வேண்டும்?




பொதுவாக ஒரு நிறுவனம் தொடங்கி குறிப்பிட்ட ஆண்டுகள் ஆன பின்னர், அந்த தொழிலை வளர்க்க பணம் தேவைப்படும் சூழல் ஏற்படும். அல்லது தொழில் நடத்தல் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்தவும், உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் கூட நிதி தேவைப்படலாம்.

அப்போது இது போன்று புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம், அந்த நிறுவனம் நிதி திரட்டிக் கொள்ளும். உதாரணமாக, 100 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு கூடுதலாக, ஒரு 50 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்றால், அந்த நிறுவனத்தின் குறிப்பிட்ட அளவு பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் இந்த நிதியை திரட்ட முடியும். பொதுவில் பட்டியலிடப்பட்டுள்ளதால், அவர்களால் பரந்த அளவிலான முதலீட்டாளர்கள், அதாவது பொது மக்களிடமிருந்து நிதி திரட்ட முடிகிறது.

ஐபிஓ துவக்கம் இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்களை இயக்குகிறது மற்றும் உதவுகிறது. IPO வெளியீடு அவர்களுக்கு தெரிவுநிலையைப் பெற உதவுகிறது. ஐபிஓ என்பது நிறுவனத்தின் ஆரம்ப முதலீட்டாளர்களுக்கு வெளியேற ஒரு வாய்ப்பாகும்.

## Key IPO Terms

**Like everything in the world of investing, initial public offerings have their own special jargon. You'll want to understand these key IPO terms:**

**Common stock.** **Units of ownership in a public company that typically entitle holders to vote on company matters and receive company dividends. When going public, a company offers shares of common stock for sale.**

**Issue price.** **The price at which shares of common stock will be sold to investors before an IPO company begins trading on public exchanges. Commonly referred to as the offering price.**

**Lot size.** The smallest number of shares you can bid for in an IPO. If you want to bid for more shares, you must bid in multiples of the lot size.

**Preliminary prospectus.** A document created by the IPO company that discloses information about its business, strategy, historical financial statements, recent financial results and management. It has red lettering down the left side of the front cover and is sometimes called the "red herring."

**Price band.** The price range in which investors can bid for IPO shares, set by the company and the underwriter. It's generally different for each category of investor. For example, qualified institutional buyers might have a different price band than retail investors like you.

**Underwriter.** The investment bank that manages the offering for the issuing company. The underwriter generally determines the issue price, publicizes the IPO and assigns shares to investors.

IPO க்கு எப்படி விண்ணப்பிப்பது?



ஐபிஓவில் முதலீடு செய்ய தேவையான ஆவணங்கள்:
டிமேட் கணக்கு.
வர்த்தக கணக்கு.
மொபைல் எண் வங்கி கணக்கில் இணைக்கப்பட்டுள்ளது.
UPI ஐடி (கட்டண பயன்பாடுகளில் பணப் பரிமாற்றத்திற்கான வங்கி அமைப்பு).

## IPO லாபம் தருமா?




பட்டியலிடப்பட்ட பிறகு பங்குகளின் சந்தை விலை, ஐபிஓவின் போது செலுத்தப்பட்ட விலையை விட அதிகமாக இருந்தால், ஐபிஓ லாபத்தை அளிக்கும். இருப்பினும், பங்கு விலைகள் நிலையற்றதாக இருக்கலாம் மற்றும் வீழ்ச்சியடையக்கூடும், இது சாத்தியமான இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு ஐபிஓ முதலீட்டின் லாபம் பெரும்பாலும் நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் ஒட்டுமொத்த சந்தை நிலைமைகளைப் பொறுத்தது.

## ஐபிஓவில் முதலீடு செய்வது நல்லதா?




நிறுவனத்திற்கு வலுவான அடிப்படைகள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் இருந்தால், ஐபிஓக்களில் முதலீடு செய்வது பலனளிக்கும். இருப்பினும், பங்குகள் அதிக விலையில் இருக்கலாம் அல்லது நிறுவனம் ஐபிஓவுக்குப் பிந்தைய செயல்திறனைக் குறைக்கலாம் என்பதால் இது அபாயங்களுடன் வருகிறது. எனவே, முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு முன் நிறுவனத்தின் நிதிநிலைகள், வணிக மாதிரி மற்றும் வளர்ச்சி உத்தி ஆகியவற்றை முழுமையாக ஆராய வேண்டும்.

## கவனம்



பெரும்பாலான முதலீட்டாளர்கள் ஐபிஓ வெளியீட்டின் போது ஏற்படும் ஹைப் காரணமாக அதில் முதலீடு செய்வதில் ஆர்வம் செலுத்துவார்கள் (உதாரணத்துக்கு 2023 மே யில் நடைபெற்ற LIC ஐபிஓ வெளியீடு). வளர்ந்து வரும் நிறுவனங்கள்தான் இந்த ஐபிஓ வெளியீட்டில் அதிகம் ஈடுபடும். பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பின்னர், எதிர்பார்த்த அளவுக்கு அதில் ரிட்டர்ன் கிடைக்காமல் போகலாம். அதனால் முதலீட்டாளர்கள் தாங்கள் முதலீடு செய்யும் நிறுவனங்கள் குறித்து தீர ஆராய்ந்து, அதன் வளர்ச்சி, செயல்பாடு போன்றவற்றை கருத்தில் கொண்டு முதலீடு செய்ய வேண்டும்.

– தொடரும்

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# மோதகத்தின் தத்துவம்



கொழுக்கட்டை எனப்படும் மோதகம் விநாயகப் பெருமானுக்கு மிகவும் பிடிக்கும் நைவேத்தியம். யானைக்கு மிகவும் பிடித்த ஆகாரங்கள் அரிசி, வெல்லக்கட்டி, தேங்காய் ஆகியவை. இவற்றைக் கொண்டே மோதகம் தயாரிக்கப்படுகிறது.

கொழுக்கட்டையில் மாவுப்பண்டமும் அதன் உள்ளே பூரணமும் உண்டு. பூரணம் இல்லாமல் மாவுப்பண்டம் சுவைப்பதில்லை. அதுபோல் பூரண பிரம்மத்தை அறியாத மனித வாழ்வில் சுகமில்லை. அர்த்தமில்லை. இந்தத் தத்துவத்தின் சின்னம்தான் கொழுக்கட்டை. எம்பெருமானே! வெளியே நான் காட்சி அளித்தாலும் என்னுள்ளே பூரணமாக இருந்து என்னைப் புனிதப்படுத்துவது நீயல்லவோ! என்னையே நான் ஆத்ம நிவேதனம் செய்கிறேன் என்பது மோதகத்தின் தத்துவ விளக்கமாகும்.

# ஆனைமுகன் அருட்பா..!!!



ஐந்து கரம் கொண்டவா ...
ஆனைமுகம் ஏற்றவா...

ஞானஜோதி ரூபவா...
பரம்பிரம்ஹ ஸ்வரூபவா...

வேதபோத வித்தகா...
வினைதீர்க்கும் ரட்சகா...

முந்திமுதல் வந்தனை ...
உனக்கு என்றும் உரித்தவா...



ஆதி என்றும் ஆனவா...
அனந்தகோடி சொரூபவா...

அருணாசலம் அப்பனே ...
உமையவள் உன் அன்னையே...


அற்புதமாய் வலம்வந்து...
மாங்கனியைப் பெற்றவா...

அடியேன் என் அருட்பா...
அருள்கூர்ந்து சுவைக்க வா...!



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# மழலை மழைத்துளிகள்..!!!



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்

## தோட்டத்து மலர்கள்

வெள்ளை மல்லிகைப் பூவுண்டு
… விரும்பும் ரோஜா மலருண்டு
கிள்ளிடப் பச்சை மரிக்கொழுந்து
… கிளையில் பூத்த செம்பருத்தி
வள்ளியும் வீட்டுத் தோட்டத்திலே
… வாகாய் பறிப்பாள் தினந்தினமே
பள்ளி செல்லும் வேளையிலே
… பகட்டாய் சூடி மகிழ்வாளே!



## தும்பைப்பூ

சின்னச் சின்னத் தும்பைப்பூ
… சிரிக்கும் வெள்ளைத் தும்பைப்பூ
அன்ன வயலில் அழகாக
… அடுக்காய் பூக்கும் தும்பைப்பூ
மென்மை இதழில் தேன்சுமக்கும்
… மெலிதாய் உருவம் கொண்டிருக்கும்
ஒன்றன் பின்னே ஒன்றாக
… ஒட்டி இணைப்போம் முறுக்காகும்!





# வினைகள் தீர்க்கும் விநாயக சதுர்த்தி !



தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் பிள்ளையார். அதனால் தான் அவருக்கு விநாயகர் என்று திருநாமம். சூரியன் சந்திரன் அக்னி ஆகிய மூன்று ஒளிப்பொருளைக் குறிக்கும் முக்கண்கள், ஐந்தொழில்களை உணர்த்தும் ஐந்து கரங்கள்... என பிரணவ தத்துவமாகவே திகழும் அந்த நாயகனைக் கொண்டாடும் திருநாள் தான் விநாயகர் சதுர்த்தித் திருநாள்.

'பிடித்து வைத்த பிள்ளையார்' என்று சொல்வதற்கேற்ப வடிவமைக்கவும், வணங்கவும் எளிமையாக இருப்பவர் விநாயகப் பெருமான். எளிமையான மூர்த்தி என்றாலும், பெரும் கீர்த்தியைக் கொண்ட முழு முதற் கடவுள் இவர். இவரை விலக்கி விட்டு எந்த வழிபாட்டையும் மேற்கொள்ளவே முடியாது என்பதுதான் இவரின் சிறப்பம்சம்.



விநாயகரைப் போலவே, விரதங்களுக்குள் முதன்மையானதும் எளிமையானதும் சதுர்த்தி விரதம்தான். முதன் முதலில் சதுர்த்தி விரதம் கடைப்பிடித்த பிறகுதான், கிருத்திகை, ஏகாதசி, பௌர்ணமி போன்ற மற்ற விரதங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும் பொதுவான நியதி.

அடக்கமின்றி தன்னைப் பார்த்து சிரித்த சந்திரனை, ஒளியில்லாமல் போகும் படி சபித்தார் விநாயகர். கடும் தவத்துக்குப் பிறகு ஒரு சதுர்த்தி தினத்தில், சந்திரனின் சாபத்தை நீக்கினார் கணநாதர். எனவே, சந்திர பலம் பெற விரும்புவோர் சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டும்.

அந்த ஆனைமுகனுக்கு உகந்த மாதம் தான் 'ஆவணி' மாதமாகும். ஆவணி மாதம் வரும் 'வளர்பிறை சதுர்த்தி' திதியை 'விநாயகர் சதுர்த்தி' என்று அழைக்கின்றோம். அன்றைய தினம் நாம் விரத மிருந்து முறையாக விநாயகரை வழிபட்டால் எல்லா பாக்கியங்களும் நமக்கு கிடைக்குமென்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.



இந்தப் புண்ணிய தினத்தில் விநாயகரை வழிபடுவதால், நமது வாழ்வு மட்டுமல்ல, நம் சந்ததியினர் வாழ்வும் செழிக்கும்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்–கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா!

என்று ஔவையார் பாடியது போல் அறிவு தெளிந்த ஞானம் முதலிவற்றை அளித்து எடுத்த செயல்கள் தடைவரா வண்ணம் காத்தருள வேண்டி  இறைவனை துதித்து வாழ்வில் நலம் பெறுவோமாக ..!!

## நம் நகரத்தார்

# செயலாற்றல் திறன்படைத்த சேவாரத்னா ஏ.ஆர்.ஆர்.



ஏ. ஆர். ஆர். என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர் திரு. இராமசாமி அவர்கள். இவர் இளையாத்தங்குடி கோவில் கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர்கள். 1934–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8ம் நாள் ஆத்தங்குடியில் பிறந்தார்கள். இவர்களுடன் கூடப் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்கள் மூன்று சகோதரிகள். தந்தை திரு. ஆறுமுகம் செட்டியார், தாயார் திருமதி. உண்ணாமலை ஆச்சி அவர்கள்.

தந்தையை குன்னக்குடியான் செட்டியார் என்ற பட்டப் பெயரைச் சொல்லித்தான் எல்லோரும் அழைப்பார்கள். குன்றக்குடி ஆறுமுகப் பெருமாளின் அருளால் அவர்களின் பேச்சில் சாதுர்யம் கலந்திருக்கும். தீர்க்க முடியாது என்று கைவிடப்பட்ட பிணக்கையும் பேசித் தீர்த்து வைக்கும் நாவன்மை பெற்றவர்கள். பிணக்கால் பிரிந்து வாடும் குடும்பப் பிரச்சினைகளை தன் பேச்சால் சேர்த்து வைப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்களே ஆவார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

திரு.ஆறு இராமசாமி அவர்களின் ஆரம்பக்கல்வி கோனாபட்டு ஸ்ரீ சரஸ்வதி உயர்நிலைப்பள்ளியில் தொடங்கியது. பிறகு சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் இண்டர்மீடியட் வரை படித்தார்கள். குடும்பச் சூழ்நிலை காரணமாக தொடர்ந்து படிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பிறகு அண்ணாமலை சர்வகலா சாலையிலேயே அலுவலகப் பணியில் சேர்ந்தார்கள். 1953 முதல் இரண்டு ஆண்டுகள் இப்பணியிலேயே இருந்து வந்தார்கள். அப்பொழுது டாக்டர் சி.பி. இராமசாமி அய்யர் அவர்கள் அண்ணாமலை சர்வகலா சாலையில் துணை வேந்தராக இருந்தார்கள். அதுசமயம் அப்பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டு கொண்டாடப்பட்டது. திரு. இராமசாமி அவர்களுக்கு பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரும், செட்டிநாட்டு அரசருமான டாக்டர் இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. திரு. இராமசாமி அவர்களின் செயல்திறன் அறிந்து அரசர் முத்தையா செட்டியார் அவர்கள் திரு. ஆறு. இராமசாமி அவர்களை இதியான வங்கியில் பணியாளராக சேர்த்து விட்டு சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு உடனடி மாற்றல் செய்து கொடுத்தார்கள்.



சென்னைக்கு வந்தவுடன் திரு. இராமசாமி அவர்களின் வாழ்க்கைப் பாதையில் புதிய திருப்பம் ஏற்பட்டது. டாக்டர் இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் உதவியாளராக பணி செய்யவும் வாய்ப்பு கிட்டியது. 1955 ஆண்டு முதல் டாக்டர் இராஜாசர் அவர்களின் கல்வி, பொது நலம் மற்றும் தர்ம ஸ்தாபனம் என்று பல துறைகளிலும் திரு.இராமசாமி அவர்கள் டாக்டர் இராஜசர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு உதவியாளராக இருந்து வந்தார்கள்.

1958–ம் ஆண்டு திரு. இராமசாமி அவர்களுக்கு திருமணம் நடந்தது. பண்புள்ள மீனாட்சி ஆச்சியை தன் துணைவியாக ஏற்றுக் கொண்டார்கள். இவர்களுக்கு மூன்று ஆண் மக்களும் ஒரு மகளும் இருக்கிறார்கள். அனைவருக்கும் திருமணம் நடந்து நல்ல நிலையில் உள்ளார்கள்.

இந்தியன் வங்கியில் பணியாற்றிய பொழுது வங்கியின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார்கள். பெருமளவில் டெபாஸிட் தொகையை சேர்த்துக் கொடுத்தார்கள்.

திரு.இராமசாமி அவர்கள் 1994–ல் இந்தியன் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்கள். கடந்த 50 ஆண்டுகளாக அவர்களுக்கு பலதரப்பட்ட கல்வி நிலையங்கள், தர்ம ஸ்தாபனங்களில் பணி செய்யும் வாய்ப்பு பெற்று செவ்வனே செய்து வருகிறார்கள்.

1984–ல் திரு.ராஜாசர் முத்தையா செட்டியார் இயற்கை எய்திய பிறகு அவருடைய தவப்புதல்வர் திரு.மு.அ.மு. இராமசாமி செட்டியார் அவரது தந்தையாரைப் போலவே மேற்கண்ட தர்ம ஸ்தாபனங்களையும் தொடர்ந்து நல்லவிதம் நடத்தி வர திரு. ஏ. ஆர். ஆர். அவர்களை மிகவும் ஊக்குவித்தார்கள். திரு.ஏ.ஆர்.ஆர். அவர்களும் திரு.எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தொடர்ந்து நல்லவிதம் செயலாற்றி வருவது பாராட்டுக்குரியது.



முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஸ்ரீ ஆர்.வெங்கட்ராமன், சட்ட வல்லுநர் திரு.சி.ஆர். பட்டாபிராமன், தமிழக ஆளுநர்கள், நரம்பியல் நிபுணர் டாக்டர் பி.ராமமூர்த்தி, தொழிலதிபர் திரு.டி.டி.வாசு கல்வியாளர் டாக்டர் கே. வெங்கட சுப்பிரமணியன் அவர்கள், குஜராத் மாநில முன்னாள் தலைமை நீதிபதி பு.ரா.கோகுலகிருஷ்ணன் அவர்கள், அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள்,

தொழிலதிபர்கள் மற்றும் யாவரோடும் மிகவும் பிரியத்துடன் நெருங்கிப் பழகும் நல்லதொரு தொடர்பினை பெற்றவர்களே திரு. ஏ.ஆர்.ஆர். அவர்கள்.

திரு. ஆறு. இராமசாமி அவர்கள் செய்து வரும் பணிகளில் உதாரணமாக சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். இராஜா சர். அண்ணாமலை நினைவு அறக்கட்டளை, இராஜா அண்ணா மலைபுரம் அறக்கட்டளை, தமிழ்நாடு கல்வி அறக்கட்டளை பொது நிறுவனங்கள் மற்றும் நிர்வாக அமைப்பு ஆகியவற்றின் கௌரவச் செயலாளராகச் சேவை செய்து வருகிறார்கள். கல்விப் பணியாக காந்தி நகர் கல்வி சொசைட்டியின் கீழ் இயங்கி வரும் ஏழு பள்ளிகளின் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள். இத்துடன் செட்டிநாட்டில் இயங்கி வரும் அண்ணாமலைப் பாலிடெக்னிக், அண்ணாமலை நகர், முத்தையா பாலிடெக்னிக் செட்டிநாடு இராணி மெய்யம்மை நினைவு அறக்கட்டளை மற்றும் சென்னையிலுள்ள இராஜா முத்தையா மற்றும் ராணி மெய்யம்மை திருமண மண்டபங்கள், இராணி சீதை மன்றம் ஆகியவற்றின் நிர்வாகத்தையும் சிறப்புடன் கவனித்து வருகிறார்கள்.

இவைகள் மட்டுமின்றி, மதுரையிலுள்ள தமிழிசைச் சங்கத்தின் டிரஸ்டியாகவும், இளையாத்தங்குடியிலுள்ள ஸ்ரீ நித்திய கல்யாணி அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாதர் கோயிலிலும், ஆத்தங்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலிலும் டிரஸ்டியாக இருந்து ஆலயத் தொண்டு செய்து வருகிறார்கள்.

மேலும், மைலாப்பூர் அகாடமி காஸ்மோபாலிடன் கிளப், பிரஸிடென்ஸி கிளப், சென்னை ரேஸ் கிளப் ஆகியவைகளிலும் உறுப்பினராக இருக்கிறார்கள்.

சென்னையிலுள்ள செண்டினேரியன் டிரஸ்ட், திரு.ஏ.ஆர். இராமசாமி அவர்களின் பொதுநலச் சேவையைப் பாராட்டி, அவர்களுக்கு சேவாரத்னா என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்து இருக்கிறார்கள்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் இவர்களின் சிறப்பான அறப்பணிகளைப் பாராட்டி அறமனச் செம்மல் என்ற கௌரவப் பட்டத்தை அளித்து பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

சுமார் 50 ஆண்டுகளாக செட்டிநாடு அரச குடும்பத்தின் ஒருவர் போல் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் திரு.ஆர். இராமசாமி அவர்கள் டாக்டர் இராஜா சர் முத்தையா செட்டியார் இராணி மெய்யம்மை ஆச்சி, திரு. குமாரராஜா முத்தையா ஆகியவர்களின் அன்பிற்கும் திருமதி. மீனா முத்தையா, எம்.ஏ.எம்.எம். அண்ணாமலை ஆகியோர் அரச குடும்பத்தினர் அனைவரின் அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியவராகத் திகழ்கிறார்கள்.

கடவுள் பக்தியோடும், கடமை உணர்வோடும் நேர்மை நெறியோடும் நன்றி கட்டுப்பாட்டுடனும் திரு.ஆறு. இராமசாமி அவர்களின் பணி தொடர்கிறது. நண்பர்கள் பணியாளர்கள் எல்லோரிடத்திலும் அன்போடு பழகும் பண்புடையவர்கள்.



அண்மையில் ஆத்தங்குடியில் இவர்களது தொண்ணூறாம் ஆண்டு நிறைவு நவதிமஹா அபிஷேக விழா 26.07.2024 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



எளிமை, உண்மை, உழைப்பு, விடாமுயற்சி ஆகியவைகளின் துணை கொண்டு எடுத்த காரியங்களில் வெற்றி என்ற குறிக்கோளுடன் பணியாற்றும் திரு. ஆறு. இராமசாமி அவர்களின் வாழ்க்கை நெறி, வருங்கால இளைய சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என்பதில் ஐயமில்லை.



இன்று போல் என்றுமிவர் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

# ஆத்தங்குடி அறமனச்செம்மல்

# உயர்திரு. ராம.ஆறு .ராமசாமி செட்டியார்

# திருமதி.மீனாட்சி ஆச்சி

# தொண்ணூறாம் ஆண்டு நிறைவு

# நவதி மஹா அபிஷேக விழா 26.07.2024

















# ரயில் வண்டி

ஓடும் வண்டிக்கு இளைக்கலையே
ஓய்வு எடுத்து பழகலையே

தண்ணீர் தாகம் எடுக்கலையே
ஒருநாள் குளித்துப் பார்க்கலையே

வெயிலும் மழையும் சலிக்கலையே
வானத்தை குடையா நினைக்கிறியே

நகரும் வீடாய் நடிக்கிறியே
இரு கோட்டில் வாழ்க்கை நடத்துறியே

கடலைக் கூட கடக்கிறியே
கடவுள் போல இருக்கிறியே

முன்பெல்லாம் உன் நிறம் சிவப்புத் தானே
இப்போது உனைப் பார்க்க வியப்புத் தானே

கைகளை நீயும் கோர்த்துக் கொண்டு
ஓடும் அழகைப் பார்ப்போர் உண்டு

மெல்ல மெல்ல ஆடிச் செல்வாய்
போகிற ஊரைத் தேடிக் கொள்வாய்

புகைக்கும் பழக்கம் கொண்டிருந்தாய்
புகையைத் துறந்து வென்று விட்டாய்

நிதிநிலை அறிக்கையை தனியே பெற்றாய்
அதனால் பயணக் கல்வியைக் கற்றாய்



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# நைவேத்திய பிரியர்



சிவன் அபிஷேகப் பிரியர், விஷ்ணு அலங்காரப் பிரியர், விநாயகரோ நைவேத்தியப் பிரியராவார். குழந்தை சுவாமியான பிள்ளையாருக்குக் குறைவில்லாமல் கொழுக்கட்டை, அப்பம், மோதகம், பொங்கல், தேங்காய், பழவகைகள் யாவற்றையும் நைவேத்தியம் செய்து வழிபடுவது மிகவும் சிறப்பினை அளிக்கும்.

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்' என்று கூறி ஔவையார் விநாயகரைத் துதிக்க ஆரம்பிக்கிறார். 'இவற்றைத் தருகிறேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று கேட்டுப் பெறுகிறார்.

இதே போன்று அருணகிரிநாதர் 'கைத்தலம் நிறை கனி அப்பமொடு அவல்பொரி' என்று பாடியுள்ளார்.

இதிலிருந்து விநாயகர் நைவேத்திய பிரியர் என்று அறியலாம்.




# வெங்காய வேர்க்கடலை சட்னி

நம் வீடுகளில் பெரும்பாலும் காலையில் வீட்டில் இட்லி, தோசை தான் டிபன்... அதற்கு என்ன சைடு டிஷ் செய்வதென்று தினமும் யோசிப்போம்... நம் வழக்கமான சைடு டிஷ் தவிர்த்து வேறு என்ன பண்ணலாம் என்று யோசனையா..ஓகே... உங்கள் வீட்டில் வேர்க்கடலை உள்ளதா?

அப்படியானால் அந்த வேர்க்கடலையுடன் வெங்காயத்தை சேர்த்து அட்டகாசமான சுவையில் ஒரு சட்னியை செய்யுங்கள். இந்த சட்னி இட்லி, தோசையுடன் மட்டுமின்றி, சப்பாத்தி, சாதத்துடன் சாப்பிடவும் அற்புதமாக இருக்கும். முக்கியமாக இது காலையில் டக்கென்று செய்வதற்கு ஏற்றவாறு இருக்கும்.

உங்களுக்கு வெங்காய வேர்க்கடலை சட்னியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த இதழில் வெங்காய வேர்க்கடலை சட்னி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நம் வீடுகளில் பெரும்பாலும் காலையில் வீட்டில் இட்லி, தோசை தான் டிபன்... அதற்கு என்ன சைடு டிஷ் செய்வதென்று தினமும் யோசிப்போம்... நம் வழக்கமான சைடு டிஷ் தவிர்த்து வேறு என்ன பண்ணலாம் என்று யோசனையா..ஓகே... உங்கள் வீட்டில் வேர்க்கடலை உள்ளதா?

**தேவையான பொருட்கள்:**

- பச்சை வேர்க்கடலை – 1 கைப்பிடி
- எண்ணெய் – 1 1/2 டீஸ்பூன்
- மல்லி – 1 டீஸ்பூன்
- சீரகம் – 1/4 டீஸ்பூன்
- வரமிளகாய் – 3
- பெரிய வெங்காயம் – 2
- கறிவேப்பிலை – 2 கொத்து
- புளி – 1 சிறிய நெல்லிக்காய் அளவு
- உப்பு – சுவைக்கேற்ப
- தண்ணீர் – சிறிது



**செய்முறை:**

- முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பச்சை வேர்க்கடலையை சேர்த்து நன்கு வறுத்து, அதை ஒரு தட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- பின்னர் அதே வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், மல்லி விதை, சீரகம், வரமிளகாய் சேர்த்து தாளிக்க வேண்டும்.

- பின் அதில் நறுக்கிய வெங்காயம் மற்றும் கறிவேப்பிலை சேர்த்து கண்ணாடி பதத்திற்கு வதக்கி இறக்கி குளிர வைக்க வேண்டும்.

- பின்பு மிக்சர் ஜாரில் வறுத்த வேர்க்கடலையை சேர்த்து சற்று பொடித்துக் கொள்ள வேண்டும்.

- பிறகு அதில் வதக்கி வைத்துள்ள வெங்காய கலவையை சேர்த்து, முதலில் ஒருமுறை லேசாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

- பின் அதில் சிறிது நீரை ஊற்றி, சுவைக்கேற்ப உப்பு சேர்த்து அரைக்க வேண்டும். முக்கியமாக நீரை அதிகமாக சேர்த்துவிடாதீர்கள்.

- இறுதியாக அரைத்த சட்னியை ஒரு கிண்ணத்தில் எடுத்தக் கொள்ள வேண்டும். இந்த சட்னியை தாளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒருவேளை தாளிக்க விரும்பினால், ஒரு வாணலியில் 2 டீஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்து சட்னியுடன் சேர்த்து கிளறினால், வெங்காய வேர்க்கடலை சட்னி தயார்.




கட்டுரையாக்கம்:

உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.





# தினம் ஒரு கொய்யா பழம்..!!

பொதுவாகவே பழங்கள் சாப்பிடுவது நம் உடலுக்கு அதிகமான ஆரோக்கியத்தை வழங்குகிறது.. அதுமட்டுமல்லாமல் நமது உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்வை அளிக்கிறது.. அத்தகைய பழங்கள் பல வகைகள் உண்டு. பழத்தின் தன்மைகேற்ப அதை வெறும் வயிற்றில், உணவுக்கு முன்பு, உணவுக்கு பின்பு, உணவுடன், படுக்கைக்கு செல்லும் போது என்று சரியாக சாப்பிட வேண்டும்.



பழங்களின் ஊட்டச்சத்துக்கள் முழுமையாக கிடைக்க சரியான முறையில் சப்பிட வேண்டும்.. அந்த வகையில் கொய்யா பழம் மிகுந்த ஊட்டச்சத்து உடைய பழம்.. அதை எப்போது சாப்பிட வேண்டும்? அப்படி சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன?

என்பது குறித்து இந்தக் கட்டுரையில் தெரிந்துக் கொள்ளலாம் வாங்க மேலும் இது வரை பழங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் பழங்களை சாப்பிட்டு வந்தால் இந்தக் கட்டுரை உங்களுக்கு கண்டிப்பாக உதவியாக இருக்கும்..



விலை மலிவாக மிக எளிதாக கிடைக்க கூடிய ஒரு பழம் என்றால் கொய்யப் பழம்தான். கொய்யா பழம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை.. அது உடலின் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் பழமாக கருதப்படுகிறது.. அதிலும் சர்க்கரை நோய் உள்ளவர்கள் தினமும் 2 கொய்யா பழம் சாப்பிடனும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.. இந்த பழங்களில் பொட்டாசியம், கார்போஹைட்ரேட், உணவு நார்ச்சத்து மற்றும் புரதம் போன்ற சத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன... அத்துடன் வைட்டமின் சி, வைட்டமின் பி6, கால்சியம், இரும்பு, மக்னீசியம் போன்ற சத்துக்களும் இதில் நிறைந்து உள்ளன.. அது மட்டுமல்லாது நூறு கிராம் கொய்யாவில் சுமார் முந்நூறு மில்லிகிராம் அஸ்கார்பிக் அமிலம் அதாவது வைட்டமின்–சி உள்ளது. கொய்யா பழங்கள் அடிக்கடி சாப்பிடுவதால் வயிறு பிரச்சினை சரியாகும் என மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

## கொய்யா பழம் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?



**ஆச்சரியமளிக்கும் ஊட்டசத்துக்கள் நிறைந்தது :**

எல்லா சீசனிலும் அதிகமாக கிடைக்கக்கூடிய, விலை மலிவான இந்த கொய்யா பழத்தை குறைவாக மதிப்பிட வேண்டாம். விலை உயர்ந்த பல பழங்களில் இருக்கக்கூடிய சத்துக்களை விட இந்த சிறிய ஒரு கொய்யா பழத்தில் ஏராளமான ஆரோக்கிய நன்மைகள் இருக்கின்றன. நம்ம ஊரில் விளையக்கூடிய இது போன்ற பழங்களில் பலவிதமான ஆச்சரியமளிக்கும் ஊட்டசத்துக்கள் நிறைந்துள்ளன..

**உடல் எடை குறைய சாப்பிடலாம் :**

கொய்யாப்பழம் நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதிலிருந்து உங்களின் உடல் எடையைச் சீரான விகிதத்தில் மேம்படுத்த உதவி செய்கிறது. அதனால் உடல் எடையை குறைக்க விரும்புவோர் கொய்யா பழத்தினை தினமும் சாப்பிடலாம்.

**வளரும் குழந்தைகளுக்கு ஏற்ற பழம் :**

கொய்யாவில் அதிக வைட்டமின் சி உள்ளது. நார்ச்சத்து அதிகம் கொண்ட கொய்யாப்பழத்தில் வைட்டமின் சி, ஏ, இ போன்ற சத்துக்களுடன் போலிக் அமிலம், பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாது சத்துக்களும் உள்ளன. அதனால் வளரும் குழந்தைகளுக்கு கொடுத்தால் மிகவும் ஆரோக்கியமாக இருப்பார்காள்..

**மலச்சிக்கலுக்கு எளிய தீர்வு:**

இந்த கொய்யா பழத்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கலுக்கு எளிய தீர்வாக இருக்கும்.. ஒரே நாளில் மலச்சிக்கலைத் தீர்க்கும் வல்லமை கொண்டது இந்த கொய்யா பழம் மட்டுமே. அதுமட்டுமல்லாமல் இந்த பழம் தொப்பையை குறைக்கும். அமிலத்தன்மை, நெஞ்சு எரிச்சல் ஆகிவற்றிற்கு தீர்வளிக்கும். அதனால் இந்த பழத்தினை மலச்சிக்கல் உள்ளவர்கள் தினமும் சாப்பிட வேண்டும்..

**சருமம் பொழிவு பெற :**

கொய்யா பழத்தில் வைட்டமின்களும், தாதுச்சத்துக்களும் நிறைந்துள்ளதால் சருமம் பொலிவு பெரும். மினுமினுப்புக் கூடி, தோல் சுருக்கம் குறையும். கண் கோளாறுகள் விலகும். இது உடம்பிற்கு குளிர்ச்சியைக் கொடுக்ககூடியது. அதனால் சரும பராமரிப்பை மேற்கொள்பவர்கள் மற்ற அழகு சாதன பொருட்களைக் காட்டிலும் இந்த கொய்யா பழத்தினை வாங்கி சாப்பிட்டு வர உங்களின் தோல் நல்ல பொழிவாக இருக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்

## கொய்யா பழத்தை இந்த நேரத்தில்தான் சாப்பிட வேண்டுமாம்.. ஏன் தெரியுமா?

கொய்யாவில் அதிக வைட்டமின் சி உள்ளது. நார்ச்சத்து அதிகம் கொண்ட கொய்யாப்பழத்தில் வைட்டமின் சி, ஏ, இ போன்ற சத்துக்களுடன் போலிக் அமிலம், பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாது சத்துக்களும் உள்ளன. அதனால் வளரும் குழந்தைகளுக்கு கொடுத்தால் மிகவும் ஆரோக்கியமாக இருப்பார்காள்..



பொதுவாகவே இந்த கொய்யா பழத்தை மாலை அல்லது இரவில் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள். கொய்யாவை இரவில் சாப்பிடுவதால், அதன் செரிமானமும் சரியாக நடைபெறாது. கொய்யாவை பகல் மற்றும் மதியம் மட்டுமே உட்கொள்ள வேண்டும். மதிய உணவுக்கு பின்பு சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து இந்த கொய்யாப் பழத்தை உட்கொள்வதால் அனைத்து வயிற்றுப் பிரச்சனைகளிலிருந்தும் நிவாரணம் கிடைக்கும் என்று உணவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ( நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

NATCO

Natco Pharma Limited

**இந்நிறுவனத்தைப் பற்றி:**

நாட்கோ பார்மா லிமிடெட் (524816/ NATCOPHARM)

நாட்கோ பார்மா லிமிடெட் ஐதராபாத்தில் 1981 ஆம் ஆண்டு INR 3.3 மில்லியன் ஆரம்ப முதலீட்டில் திரு.V . C . நன்னபனேனியால் தொடங்கப் பட்டது. 20 பணியாளர்களுடன் ஒரு சாதாரண யூனிட்டாக தொடங்கிய நாட்கோ இன்று இந்தியா முழுவதும் பிரத்யேக நவீன ஆராய்ச்சி ஆய்வகங்கள், புதிய மருந்து உருவாக்கத்தில் திறன்கள் போன்றவற்றுடன் எட்டு உற்பத்தி வசதிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இந் நிறுவனம் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வலுவான உலகளாவிய இருப்பைக் கொண்டுள்ளது. NATCO ஒரு மதிப்புமிக்க மருந்து நிறுவனமாக உருவெடுத்துள்ளது, இது ஃபினிஷ்ட் டோசேஜ் ஃபார்முலேஷன்ஸ் (FDF) மற்றும் ஆக்டிவ் ஃபார்மாசூட்டிகல் இங்க்ரீடியண்ட்ஸ் (APIகள்) ஆகியவற்றில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் முன்னிலையில் உள்ளது.

**உற்பத்தி வசதி மற்றும் உற்பத்தி திறன்:**

NATCO PHARMA வெளிநாட்டு துணை நிறுவனங்களில் Natcofarma do Brasil அடங்கும், இது நாட்கோ இந்தியாவின் துணை நிறுவனமாகும், இது 2011 இல் செயல்படத் தொடங்கியது. இது மூன்று வணிக நிறுவனங்களின் கீழ் செயல்படுகிறது – மருந்துகள், OTC மற்றும் விநியோக சேவைகள்.

Natco Pharma Canada Inc., முற்றிலும் சொந்தமான துணை நிறுவனம் 2012 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது.

டொராண்டோவை தலைமையிடமாகக் கொண்டு QA, RA மற்றும் விற்பனைப் படையை உள்ளடக்கிய வலுவான உள்ளூர் குழுவால் ஆதரிக்கப்படுகிறது. நாட்கோ பார்மா ஏசியா பிரைவேட் லிமிடெட் சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்டு, ஆசிய சந்தையில் நாட்கோவின் தயாரிப்புகளின் பதிவு மற்றும் நேரடி விற்பனையில் துணை நிறுவனம் ஈடுபட்டுள்ளது. செப்டம்பர் 2014 இல் இணைக்கப்பட்ட Natco Pharma Australia Pty Ltd, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் சந்தைகளில் NATCO தயாரிப்புகளின் பதிவு மற்றும் உரிமம் வழங்குவதில் துணை நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

NATCO Pharma USA LLC என்பது NATCO Pharma Limited இன் முழுச் சொந்தமான ஸ்டெப்–டவுன் துணை நிறுவனமாகும். ஜனவரி 2022 இல் Dash Pharmaceuticals LLC ஐ கையகப்படுத்தியதன் மூலம் துணை நிறுவனமாக இணைக்கப்பட்டது. NATCO Pharma USA LLC என்பது அமெரிக்க சந்தையில் நாட்கோவின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முன்னணியில் உள்ளது.

NATCO பார்மாவின் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையானது பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளில், குறிப்பாக புற்றுநோயியல் துறையில் விரிவாக்கப்பட்ட திறன்களுக்கு வழிவகுத்தது. நிறுவனம் மருந்துகள் மற்றும் வேளாண் இரசாயனங்கள் என இரண்டு முக்கிய பிரிவுகளில் செயல்படுகிறது. பயிர் சுகாதார அறிவியல் (CHS) பிரிவில், சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான உயிர்க்கட்டுப்பாட்டுப் பொருட்கள் உட்பட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவனம் அதிக மதிப்புள்ள விவசாய உள்ளீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது.

நாட்கோ, பல ஆண்டுகளாக, உற்பத்தியில் ஒரு திறமையை வளர்த்து வருகிறது சில போட்டியாளர்களைக் கொண்ட சிக்கலான பொதுவான தயாரிப்புகள், குறிப்பாக அமெரிக்க சந்தைக்கு. இந்திய சூத்திரங்கள் முக்கியமாக புற்றுநோயியல் தயாரிப்புகளை (39 பிராண்டுகள்) உள்ளடக்கியது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, இது அபாயகரமான துவக்கங்களுக்கான கூட்டாண்மை தயாரிப்புகளைப் பின்பற்றுகிறது மற்றும் முன்–இறுதி முன்னிலையில் டாஷ் பார்மாவை வாங்கியது. இது ஆறு FDF, இரண்டு API உற்பத்தி வசதிகள் மற்றும் இரண்டு பயிர் சுகாதார அறிவியல் அலகுகளைக் கொண்டுள்ளது. இன்று, FDF தயாரிப்புகள் முக்கியமாக அமெரிக்கா, இந்தியா, கனடா, பிரேசில் மற்றும் 50+ நாடுகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

உலகில். உலகெங்கிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு A P I தயாரிப்புகள் நேரடியாக விற்கப்படுகின்றன. அதிநவீன உற்பத்தித் திறன்களைப் பயன்படுத்தி உயர்தர தயாரிப்புகளின் நற்பெயரில் நிறுவனம் வளர்கிறது. 6 FDF உற்பத்தி வசதிகள், 2 API உற்பத்தி வசதிகள், 2 பயிர் சுகாதார அறிவியல் அலகுகள் (தொழில்நுட்பம் & ஃபார்முலேஷன்ஸ்), 2 R&D மையங்களைக் கொண்ட நிறுவனம். 251 இந்திய காப்புரிமைகளை தாக்கல் செய்த நிறுவனம் & 97 காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன, 272 சர்வதேச காப்புரிமைகள் மற்றும் 193 காப்புரிமைகள் வழங்கப்பட்ட நிறுவனம் கூட. அமெரிக்காவில் 44 செயலில் உள்ள FDFகள் மற்றும் இந்தியாவில் 50+ செயலில் உள்ள FDFகள் கொண்ட நிறுவனம்.

சன்–ரான்பாக்ஸி, அசிட்டோ–ரைசிங், அல்வோஜென், தேவா, மைலான், ஆக்டாவிஸ், லூபின், ப்ரெக்கென்ரிட்ஜ் பார்மாசூட்டிகல்ஸ் மற்றும் டிஆர்எல் ஆகியவை அமெரிக்க சந்தைக்கான அவர்களின் முக்கிய பங்குதாரரர்களில் சில.

**இந்நிறுவனத்தின் தயாரிப்புகள்:**

நிறுவனம் பிளாக்பஸ்டர்களைக் கொண்டுள்ளது, இதன் மூலம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சந்தைகளில் அதன் இருப்பை வலுப்படுத்துகிறது. அவற்றில் சில சிறந்த எடுத்துக்காட்டுகள், 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமெரிக்காவில் 40 mg Glatiramer Acetate இன் முதல் பொதுவான பதிப்பான மைலான் NV அதன் சந்தைப்படுத்தல் கூட்டாளியின் மூலம் Natco அறிமுகப்படுத்தியது. USA சந்தைக்கு பொதுவான Doxorubicin Hydrochloride Liposome ஊசிக்கு ஒப்புதல்; நாட்கோ மற்றும் அதன் சந்தைப்படுத்தல் பங்குதாரரான டாக்டர். ரெட்டிஸ் லேபரேட்டரீஸ் சிக்கலான ஊசிகள் அரங்கில் உள்ளது.

2016 டிசம்பரில் ஃப்ளூ சீசனில் மார்க்கெட்டிங் பார்ட்னரான Alvogen உடன் இணைந்து அமெரிக்காவில் Oseltamivir காப்ஸ்யூல்களின் 1வது பொதுவான பதிப்பை N A T C O அறிமுகப்படுத்தியது. "அனைவருக்கும் பிரத்யேக மருந்துகளை அணுகக்கூடியதாக மாற்றுவது" என்ற அதன் நோக்கத்திற்கு ஏற்றவாறு செயல்படும் NATCO, ஹெப்சினாட் (சோஃபோஸ்புவிர்), ஹெப்சினாட்–எல்பி (லெடிபாஸ்விர்/சோஃபோஸ்புவிர்), நாட்டாக் (டக்லடாஸ்விர்) ஆகியவற்றின் பொதுவான பிராண்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

NATCO மத்தியில் உள்ளது இந்தியாவில் Sofusbuvir (SOF) மற்றும் அதன் சேர்க்கைகளின் பொதுவான பதிப்புகளை அறிமுகப்படுத்திய முதல் நிறுவனங்கள்; ஹெபடைடிஸ் சி வைரஸ் (H C V ) பராமரிப்பாளர்கள், நோயாளிகள் மற்றும் நிறுவனத்திற்கு இது உண்மையிலேயே ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும்.

கல்லீரல் புற்றுநோய் (ஹெபடோசெல்லுலர் கார்சினோமா – HCC) சிகிச்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட முதல் முறையான சிகிச்சை Sorafenib ஆகும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான இந்தியர்களின் விலைக்கு அப்பாற்பட்டது என்பதால் அதன் பலன்கள் நோயாளிகளைச் சென்றடையவில்லை. NATCO துன்பத்தின் அவல நிலையைக் கண்டது மற்றும் கட்டாய உரிமம் மூலம் தயாரிப்பு கிடைக்கச் செய்வதன் மூலம் பதிலளித்தது. என்.எஸ்.சி.எல்.சிக்கான முதல் இலக்கு சிகிச்சையான சிறிய அல்லாத உயிரணு நுரையீரல் புற்றுநோய் (என்.எஸ்.சி.எல்.சி) சிகிச்சைக்கு ஜீஃபிடினிப் ஒரு புதிய வாழ்க்கையை கொண்டு வந்தது. இதுபோன்ற பல புதுமையான தயாரிப்புகளுடன் NATCO இந்திய புற்றுநோயியல் சந்தையின் விடிவெள்ளி யாக செயல் பட்டு வருகிறது.

நாட்கோ இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக முக்கிய ஏபிஐகளை உருவாக்கி வணிகமயமாக்குவதில் தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு நிபுணத்துவத்தை நிரூபித்துள்ளது. ஆன்காலஜி அவர்களின் முக்கிய சிகிச்சை களமாகத் தொடரும் அதே வேளையில், மத்திய நரம்பு மண்டலம் (சிஎன்எஸ்), வலி மேலாண்மை மற்றும் சிவி பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஏபிஐ தயாரிப்பு போர்ட்ஃபோலியோ பரந்த அடிப்படையிலானது.

USFDA, TGA, Hamburg Health Agency, PMDA, KFDA, Cofepris/Mexico மற்றும் EDQM ஆகியவற்றின் ஒழுங்குமுறை ஆய்வுகளின் வெற்றிகரமான பதிவுகளை நாட்கோ கொண்டுள்ளது.

உள்நாட்டு FDF வணிகமானது புற்றுநோயியல், இருதயநோய் & நீரிழிவு நோய் மற்றும் சிறப்பு மருந்துகள் ஆகிய மூன்று சிகிச்சைப் பகுதிகளில் பெரும்பாலும் குவிந்துள்ளது. நிறுவனம் ஒப்பந்த உற்பத்தி வணிகத்திலும் ஈடுபட்டுள்ளது, இதன் மூலம் மருந்து தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும் வழங்குவதற்கும் நிறுவனம் மருந்து நிறுவனங்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை மேற்கொள்கிறது. நிறுவனம் சமீபத்தில் கரிம வேதியியலில் தங்கள் திறன்களைப் பயன்படுத்துவதற்காக பயிர் சுகாதார அறிவியல் வணிகத்தில் பல்வகைப்படுத்தியது. NATCO வின் பயிர் சுகாதார அறிவியல் தயாரிப்புகளில் பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள், உயிர்–தூண்டுதல்கள், களைக்கொல்லிகள், செமியோகெமிக்கல்கள் ஆகியவை அடங்கும்.

**நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:**

அடிப்படை கண்ணோட்டம்: இண்டஸ்ட்ரி PE 43.93 உடன் ஒப்பிடுகையில் 77.51 EPS (2024–03 இல் முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள்) ஒருங்கிணைந்த PE விகிதம் 16.14.

**Natco Pharma Share Price Insights** VIEW ALL

- **Board Meeting was held on Aug 12, 2024**
  Meeting Agenda: Quarterly Results & Interim Dividend. Please add to watchlist to track closely.
- **ROE Outperforming 5 Year Average**
- **Beating 3 Yr Revenue CAGR**
- **Stock Returns vs Nifty Midcap 100**
- **Natco Pharma Share Price Update**

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>16.14 | EPS - TTM (₹)<br>91.37 |
| MCap (₹ Cr.)<br>25,975.41 | Sectoral MCap Rank<br>21 |
| PB Ratio (x)<br>4.51 | Div Yield (%)<br>0.64 |
| Face Value (₹)<br>2.00 | Beta<br>0.45 |
| VWAP (₹)<br>1,463.87 | 52W H/L (₹)<br>1,539.70 / 724.20 |

**Natco Pharma Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | 1.1% |
| 1 Week | 5.42% |
| 1 Month | 25.9% |
| 3 Months | 50.63% |
| 1 Year | 80.67% |
| 3 Years | 50.85% |
| 5 Years | 170.66% |

# நிறுவனத்தின் நிதி நிலை:

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**

Company's annual revenue growth of 46.78% outperformed its 3 year CAGR of 23.9%. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**

Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 13.13% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | JUN 2024 | MAR 2024 | DEC 2023 | SEP 2023 | JUN 2023 |
|---|---|---|---|---|---|
| Total Income | 1,410.70 | 1,110.30 | 795.60 | 1,060.80 | 1,160.20 |
| Total Income Growth (%) | ↑27.06 | ↑39.56 | ↓-25.00 | ↓-8.57 | ↑25.17 |
| Total Expenses | 601.90 | 626.50 | 534.70 | 617.00 | 656.00 |
| Total Expenses Growth (%) | ↓-3.93 | ↑17.17 | ↓-13.34 | ↓-5.95 | ↑9.37 |
| EBIT | 808.80 | 483.80 | 260.90 | 443.80 | 504.20 |
| EBIT Growth (%) | ↑67.18 | ↑85.44 | ↓-41.21 | ↓-11.98 | ↑54.14 |
| Profit after Tax (PAT) | 668.50 | 386.30 | 212.70 | 369.00 | 420.30 |
| PAT Growth (%) | ↑73.05 | ↑81.62 | ↓-42.36 | ↓-12.21 | ↑52.39 |
| EBIT Margin (%) | 57.33 | 43.57 | 32.79 | 41.84 | 43.46 |
| Net Profit Margin (%) | 47.39 | 34.79 | 26.73 | 34.79 | 36.23 |
| Basic EPS (₹) | 37.32 | 21.56 | 11.88 | 20.60 | 23.26 |

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 6,906.30 | 5,657.40 | 5,109.10 | 4,791.90 | 4,587.80 |
| Total Assets Growth (%) | ↑22.08 | ↑10.73 | ↑6.62 | ↑4.45 | ↑6.62 |
| Total Liabilities | 1,053.20 | 783.60 | 845.50 | 668.50 | 803.10 |
| Total Liabilities Growth (%) | ↑34.41 | ↓-7.32 | ↑26.48 | ↓-16.76 | ↓-1.11 |
| Total Equity | 5,853.10 | 4,873.80 | 4,263.60 | 4,123.40 | 3,784.70 |
| Total Equity Growth (%) | ↑20.09 | ↑14.31 | ↑3.40 | ↑8.95 | ↑8.41 |
| Current Ratio (x) | 4.14 | 4.39 | 3.52 | 4.45 | 3.39 |
| Total Debt to Equity (x) | 0.06 | 0.03 | 0.09 | 0.06 | 0.08 |
| Contingent Liabilities | 0.00 | 22.10 | 22.40 | 28.00 | 98.80 |

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 1032.7 cr for investing activities which is an YoY increase of 116.45%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 1,211.60 | 849.10 | 46.50 | 298.80 | 417.30 |
| Net Cash used in Investing Activities | -1,032.70 | -477.10 | -5.30 | -103.30 | -167.00 |
| Net Cash flow from Financing Activities | -246.90 | -363.00 | 34.80 | -185.70 | -250.80 |
| Net Cash Flow | -61.50 | 20.80 | 85.30 | 6.00 | -8.50 |
| Closing Cash & Cash Equivalent | 70.40 | 131.90 | 111.10 | 25.80 | 19.80 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-46.63 | ↑18.72 | ↑330.62 | ↑30.30 | ↓-30.04 |
| Total Debt/ CFO (x) | 0.30 | 0.19 | 8.69 | 0.89 | 0.76 |

| Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios | CONSOLIDATED |
|---|---|---|---|---|

**INSIGHTS**

ROE Outperforming 5 Year Average

Company delivered ROE of 23.71% in year ending Mar 31, 2024 outperforming its 5 year avg. of 13.87%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 23.71 | 14.67 | 3.98 | 10.69 | 12.21 |
| Return on Capital Employed (%) | 28.52 | 17.61 | 4.99 | 13.89 | 15.12 |
| Return on Assets (%) | 20.10 | 12.64 | 3.32 | 9.20 | 10.04 |
| Interest Coverage Ratio (x) | 97.89 | 71.74 | 20.48 | 53.37 | 32.09 |
| Asset Turnover Ratio (x) | 0.64 | 0.50 | 0.36 | 0.35 | 0.40 |
| Price to Earnings (x) | 12.27 | 14.39 | 81.30 | 34.25 | 20.00 |
| Price to Book (x) | 2.91 | 2.11 | 3.24 | 3.65 | 2.44 |
| EV/EBITDA (x) | 8.75 | 9.52 | 38.67 | 21.19 | 13.73 |
| EBITDA Margin (%) | 47.00 | 38.42 | 18.63 | 34.58 | 36.03 |

# மேம்பட்ட விளக்கப்படம்:






# சகநிறுவன ஒப்பீடு:

**Natco Pharma Stock Performance** | Ratio Performance | CHART | TABLE

**INSIGHTS**

**Stock Returns vs Nifty Midcap 100**


Stock gave a 3 year return of 49.22% as compared to Nifty Midcap 100 which gave a return of 107.72%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Pharma**

Stock generated 49.22% return as compared to Nifty Pharma which gave investors 58.06% return over 3 year time period. (as of last trading session)

Natco Pharma | Ipca Labs × | Syngene Int. × | Gland Pharma × | Search by Stock

1D 1W 1M 3M 6M 1Y 5Y




Natco Pharma Stock Performance | **Ratio Performance** | SEE ALL PARAMETERS

**INSIGHTS**

**Stock Returns vs Nifty Midcap 100**

Stock gave a 3 year return of 49.22% as compared to Nifty Midcap 100 which gave a return of 107.72%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Pharma**

Stock generated 49.22% return as compared to Nifty Pharma which gave investors 58.06% return over 3 year time period. (as of last trading session)

| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| Natco Pharma | | 15.82 | 4.42 | 23.71 | 20.10 | 23.90 | 42.33 |
| Ipca Labs | × | 60.67 | 4.53 | 8.64 | 4.93 | 12.48 | 14.12 |
| Gland Pharma | × | 45.76 | 3.79 | 8.85 | 7.24 | 17.30 | 20.45 |
| Syngene Int. | × | 66.32 | 7.67 | 11.97 | 8.29 | 16.57 | 19.46 |
| J B Chemicals | × | 51.18 | 10.28 | 18.90 | 13.83 | 17.59 | 22.84 |

Add More

*Annual Ratios (%)*

# ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

**QOQ Change** | Total Shareholdings

**Loading...**

*Showing Natco Pharma Shareholding as on 30 Jun 2024*

| CATEGORY | 30 JUN 2024 | 31 MAR 2024 | 31 DEC 2023 | 30 SEP 2023 |
|---|---|---|---|---|
| Promoters | 49.71 | 49.71 | 49.71 | 49.71 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 17.45 | 16.14 | 13.71 | 12.82 |
| DII | 7.85 | 9.69 | 11.26 | 14.01 |
| Mutual Funds | 2.67 | 4.08 | 5.20 | 7.65 |
| Others | 24.99 | 24.46 | 25.31 | 23.45 |

QOQ Change | Total Shareholdings

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 8,90,30,275 | 49.71 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 3,12,61,880 | 17.45 % | ↑1.30 |
| DII | 1,40,86,015 | 7.85 % | ↓-1.83 |
| MF | 47,82,751 | 2.67 % | ↓-1.41 |
| Others | 4,47,31,700 | 24.99 % | ↑0.53 |

*Showing Shareholding as on 30 Jun 2024*

சமீபத்திய தரவுகளின்படி ப்ரமோட்டர் வசம் 49.71% பங்குகள் உள்ளது. கடந்த சில காலாண்டுகளில் கிடைக்கும் தரவுகளின்படி எஃப்ஐஐ 11.03% (2023–06) இலிருந்து 17.45% (2024–06) வரை அதிகரித்துள்ளது. பிரபல முதலீட்டாளர் ஆகாஷ் பன்ஷாலி நிறுவனத்தில் 1.01% பங்குகளை வைத்துள்ளார். நிறுவனம் கிட்டத்தட்ட கடனில்லா நிறுவனம் ஆகும் .24.9% ஈவுத்தொகை செலுத்துதலைப் பராமரிக்கிறது

**மியூச்சுவல்ஃபண்ட் நிறுவனத்தின் முதலீடு:**

**MF Ownership**

| Scheme | Category | Rating | Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |
|---|---|---|---|---|---|
| Tata Equity PE Direct-G | Equity: Value Oriented | 3.0 ★ | 141.48 | 1.67% | ↑13.05 |
| Tata Small Cap Direct-G | Equity: Small Cap | 5.0 ★ | 105.02 | 1.33% | 0.00 |
| SBI Magnum Midcap Direct-G | Equity: Mid Cap | 3.0 ★ | 87.58 | 0.43% | 0.00 |

*MF Ownership as on 30 June 2024*

View all Mutual Fund Schemes »

Natco Pharma Ltd. — 1-25 of 36

| Fund Name (Portfolio as on 30-06-2024) | Category | Rating | Number of shares | %Change in Shares (MOM basis) | % of AUM | Amount Invested (in ₹ Cr) |
|---|---|---|---|---|---|---|
| Tata Small Cap Direct-G | Equity: Small Cap | 105.02 | 900000 | 0.00% | 1.33% | |
| SBI Magnum Midcap Direct-G | Equity: Mid Cap | 87.58 | 750551 | 0.00% | 0.43% | |
| Canara Robeco Emerging Equities Direct-G | Equity: Large & MidCap | 57.92 | 496416 | 100.00% | 0.24% | |
| Mahindra Manulife Small Cap Direct-G | Equity: Small Cap | ★★★★★ 40.65 | 348385 | 0.00% | 0.89% | |
| Mirae Asset Healthcare Direct-G | Equity: Sectoral-Pharma | 25.28 | 216673 | 0.00% | 1.09% | |
| Axis Quant Direct-G | Equity: Thematic | ★★★★★ 24.51 | 210021 | 0.00% | 2.19% | |
| Nippon India Nifty Pharma ETF-G | Equity: Sectoral-Pharma | ★★★★★ 9.94 | 85158 | 9.35% | 1.56% | |
| Nippon India Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | 9.23 | 79082 | 4.36% | 0.6% | |
| Mahindra Manulife Aggressive Hybrid Direct-G | Hybrid: Aggressive Hybrid | 8.87 | 76000 | 0.00% | 0.7% | |

Natco Pharma Ltd. — 1-25 of 36

| Fund Name (Portfolio as on 30-06-2024) | Category | Rating | Number of shares | %Change in Shares (MOM basis) | % of AUM | Amount Invested (in ₹ Cr) |
|---|---|---|---|---|---|---|
| Bandhan Multi Cap Direct-G | Equity: Multi Cap | ★★★★★ 8.75 | 75000 | -25.00% | 0.38% | |
| Axis Nifty Smallcap 50 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 5.85 | 50096 | 2.71% | 1.64% | |
| SBI Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 5.25 | 44963 | 5.36% | 0.6% | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Motilal Oswal Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | 4.41 | 37793 | -3.43% | 0.6% | |
| Aditya Birla SL Nifty Smallcap 50 Index Direct-G | Equity: Small Cap | 3.62 | 30989 | 21.94% | 1.64% | |
| Mirae Asset Nifty Smallcap 250 Momentum Quality 100 ETF-G | Equity: Thematic | ★★★★★ 3.00 | 25689 | 3.79% | 1.16% | |
| HDFC NIFTY Smallcap 250 ETF-G | Equity: Small Cap | ★★★★★ 2.19 | 18755 | 13.83% | 0.6% | |
| ICICI Pru Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 2.09 | 17927 | 5.25% | 0.6% | |
| HDFC NIFTY Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 1.34 | 11493 | 12.64% | 0.6% | |
| Kotak Nifty Smallcap 50 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 1.27 | 10863 | 15.15% | 1.63% | |
| Tata Nifty MidSmall Healthcare Index Direct-G | Equity: Sectoral-Pharma | ★★★★★ 1.06 | 9077 | 27.20% | 2.27% | |

Natco Pharma Ltd.

1-25 of 36

| Fund Name (Portfolio as on 30-06-2024) | Category | Rating | Number of shares | %Change in Shares (MOM basis) | % of AUM | Amount Invested (in ₹ Cr) |
|---|---|---|---|---|---|---|
| Mirae Asset Nifty MidSmallcap400 Momentum Quality 100 ETF-G | Equity: Thematic | ★★★★★ 1.05 | 8983 | 100.00% | 0.56% | |
| Motilal Oswal Nifty 500 Index Direct-G | Equity: Flexi Cap | 0.88 | 7576 | 25.35% | 0.06% | |
| ICICI Pru Nifty Pharma Index Direct-G | Equity: Sectoral-Pharma | ★★★★★ 0.81 | 6941 | 24.50% | 1.55% | |
| Tata Nifty500 Multicap India Manufacturing 50:30:20 Index Direct-G | Equity: Thematic | ★★★★★ 0.58 | 4972 | 7.57% | 0.58% | |

**எமது பரிந்துரை:**

ஒட்டுமொத்த அடிப்படை மற்றும் நிதி அளவுருக்கள் வலுவானதாகத் தெரிகிறது. நிறுவனம் தொடர்ந்து வலுவாகச் செயல்பட்டால், நல்ல வளர்ச்சியைக் காணலாம். நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை), நீண்ட கால (2 முதல் 3 ஆண்டுகள் வரை) முதலீட்டுக்கு நல்லது.

இப்பங்கினை ரூபாய் 1400 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 1000 வரை வாங்கலாம்.

இலக்கு ரூபாய் 2100 மற்றும் ரூபாய் 2800 ஆகும்.

**இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:**

1. **Sandur Manganese and Iron Ores Ltd...**
   **Entry 520 to 540. Accumulate more on down till 400.**
   **Target 650 and 740.**

2. **Man Industries (India) Ltd...**
   **Entry 400 to 420. Accumulate more on down till 350.**
   **Target 480 and 540.**

3. **NRB Bearings Limited...**
   **Entry 300 to 320. On the downside accumulate till 250.**
   **Target 380 and 420**

4. **Ramkrishna Forgings Ltd...**
   **Entry 840 to 860. Accumulate more on down till 700.**
   **Target 920 and 1000.**

5. **The Ramco Cements Ltd...**
**Entry 800 to 820. Accumulate more on down till 640.**
**Target 920 and 1000**

6. **Aditya Birla Capital Ltd...**
**Entry 190 to 200. Accumulate more on down till 160.**
**Target 240 and 270.**

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates**
Every month will post it on our
NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On SATURDAY
28th AUGUST 2024

**Webinar Timings**
India Time: in 17:30Hrs-18.30Hrs / 21.00- 22.00Hrs
In-Week days & 17.00Hrs-18.00Hrs / 20.00-21.00Hrs
Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி... கன்னி லக்னம்..!



–ஜோதிடர் எல்லி
9894176494

கன்னிலக்னம் காலசக்கரத்தின் 6 வது வீடு! . உபஜெய ஸ்தானங்களில் ஒன்று! இந்த பாவகம் கடன், போட்டி,வழக்கு, எதிரிகள், நோய் முதலியவற்றை உணர்த்தும் இடம்.



கன்னி லக்னத்திற்கு அதிபதி புதன் பகவான் ஆவார். புதன் உடலில் நரம்புமண்டலத்தை குறிப்பவர். கல்விக்கும், ஆழ்ந்த மதிநுட்பம், கணிதம் மற்றும் சோதிடம் இவற்றிற்கும் புதன் காரகன்.

கன்னி லக்னத்திற்கு அதிபதி புதன் பகவான் ஆவார். புதன் உடலில் நரம்புமண்டலத்தை குறிப்பவர். கல்விக்கும், ஆழ்ந்த மதிநுட்பம், கணிதம் மற்றும் சோதிடம் இவற்றிற்கும் புதன் காரகன்.

உறவுகளில் தாய்மாமனையும், மாமனார் வழி பற்றி புதன் மூலமே அறிய முடியும். வாக்குக்கு காரகன் புதன்! பேச்சுக்கு அதிபதி பேச்சில் புலமை உள்ளவர்களும் தகவல் தொடர்பில் சிறப்பாக செயல்படுபவர்களும் புதன் பகவானின் ஆளுமை பெற்றவர்களே!

மிதுன புதனிலிருந்து கன்னி புதன் மாறுபட்டவர். மிதுன லக்னம் காற்று தத்துவம் ஆண் ராசி வல்லாதிக்கம், ஆளுமை கொண்டது சமயத்தில் பழி வாங்கும் எண்ணம் கூட மேலோங்கும்.

ஆனால் கன்னி லக்னம் மென்மை, இரக்க குணம் மிகுந்து காணப்படும். கன்னி லக்னகாரர்கள் அதிக உணர்ச்சிவசபடும் இயல்பு கொண்டவர்கள், இவர்களின் முன் கோபம் மற்றும் அசட்டு தைரியத்தால் பல நேரங்களில் சிக்கலில் மாட்டி கொண்டு தவிப்பது உண்டு. பெரும்பாலும் இவர்கள் வெளித்தோற்றத்திற்கு மென்மையானவர்கள்!

குடும்பத்தில் பெண்கள் ஆண்கள் என அனைவருக்கும் பிடித்தமான லக்னகாரர்கள் இவர்கள்தான். மற்றவர்கள் இவர்களை பயன்படுத்திக் கொள்வார்கள்.



மணவாழ்க்கையில் எதிர்பார்ப்புகளை குறைத்து கொண்டு நிதானமாக வாழ்க்கைத்துணையை அமைத்துக் கொள்வது சிறந்தது. ஆண் ஜாதகர்கள் மனைவிக்கு கட்டுபட்டவர்கள். திருமணத்திற்கு முன்பு தாயாரின் செல்ல குழந்தையாக இருப்பார்கள். தாயாருக்கும், மனைவிக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் இருக்கும். இருவரையும் சமமாகவே நேசிப்பார்கள்.

அங்காரகன் எனப்படும் செவ்வாய் பகவான் இவர்களுக்கு 3–8 க்குடையவர் அதனால் சாதுவாக தெரிந்தாலும் திடீர் கோபம் வெளிப்படும் அதே வேளையில் அதனால் இடரே மிகும்.. செவ்வாய் உச்சம் பெற்றால் ஆயுள் கெட்டி என்ற போதிலும் விபத்துகளை சந்திக்க வேண்டிவரும்!. அதே வேளையில் விளையாட்டு போர்க்கலைகளில் அசகாய சூரர்தான்!

செவ்வாய் 1 0 ல் அமர்ந்து லக்னாதிபதியான புதன் வலுத்தால் மிகப்பெரிய யோகம் அரசு அல்லது தனியார் துறையில் அதிகாரம் மிக்க உயர் பதவியில் அமர்வார். கன்னி லக்னத்திற்கு புதன் எட்டில் மறைந்தாலும் செவ்வாய் சுபத்துவம் அடைந்தால் நற்பலன்கள் செய்வார்!

மீன லக்னத்தை போல இவர்களும் இல்லற பந்தத்தில் இருந்து தப்பிக்க நினைப்பவர்கள். போக காரகன் சுக்கிரன் கன்னிக்கு 2,9 க்குடைய யோககாரகன் ஆகிறார் எனவே சுக்கிரன் வலுவாக அமைதல் மிக அவசியம் சுக்கிரன் வலுத்த கன்னி லக்னகாரர் களுக்கு தனம், வரவு, சொத்துக்கள் இவையெல்லாம் தந்தையார் மூலமே வசப்பட்டு விடும்.

சுக்கிரன் ஏழில் உச்சமானால் போகத்திற்கு இட்டு செல்லும் நிலை ஏற்பட்டு விடும், திருமணம் கேள்விக்குறி ஆகி பல காதல் கதைகள் இருக்கும் ஜாதகருக்கு.

லக்னாதிபதி புதன் கர்ம ஸ்தானாதிபதியாகவும் வருவதால் லக்னத்தில் ஆட்சி உச்சம் பெறுவது அவ்வளவு சிறப்பல்ல அதுவும் செவ்வாய் சாரம் பெறுவது எதிலும் கடின உழைப்பை செலுத்த வேண்டியதிருக்கும்.



புதன் ஆதிக்கம் செலுத்தும் வங்கி, பள்ளி, கல்லூரிகளில் வேலை அமைய வாய்ப்பு உண்டு. தொடர்பு கொள்ளும் ஆற்றல், (communications skills) மனதில் இருக்கும் எண்ணத்தை திறம்பட விளக்கம் திறமை புதனுக்கு கை வந்த கலை என்பதால் அது சார்ந்த துறையினை இவர்கள் தேர்ந்தெடுத்து கொள்வது சிறப்பை கொடுக்கும். தூது செல்வது தரவு தொழில் கைகொடுக்கும்.

வியாபாரத்திற்கும் இவர்கள் ஏற்றவர்கள் தான், போணி ஆகாத பொருட்களையும் விற்று தள்ளி விடும் சாமர்த்தியம் இருக்கும். புதனுடன் சந்திரன் இணைந்தால் வணிகம் குறித்த எண்ணமே இவர்களுக்கு அதிகமாக இருக்கும்.

புதன் சூரியன் இணைவு நிபுணத்துவ யோகத்தை கொடுக்கும் தந்திரசாலியாக இருப்பார்கள்.

கன்னி லக்னத்திற்கு சந்திரன் அசுராக இருப்பதால் தனித்த சந்திரன் நன்மைகள் அளிப்பதில்லை, ஏழில் சந்திரன் நிற்பது தாமத திருமணத்திற்கு வழிவகை செய்கிறது.


லக்னாதிபதி புதன் பாதிக்கபடும் போது புதனின் காரகத்துவம் எதுவும் செயல்படாது ஜாதகரின் ஆரம்ப கல்வியே திண்டாட்டம் ஆகி விடும்! புதன் ஏழில் போனால் மனைவிக்கு அடிமைதான்.



குரு பகவான் இவர்களுக்கு பாதகாதிபதி மற்றும் 4,7 க்கு அதிபதி. கன்னி லக்னகாரர்களை பாடாய் படுத்துவதில் முதலிடம் இவருக்கு தான். இவரின் தசா புத்தி யில் பல இன்னல்களை கொடுக்கிறார்

லக்னாதிபதி புதனின் நட்பு கிரகமான சனீஸ்வரர் ஐந்து, மற்றும் ஆறாம் அதிபதி யாகவும் வருகிறார். நாலில் அமரும் போது தாயார் நலத்தை பாதிக்கிறார் கூடவே ஜாதகரின் சுகத்தையும், கடன் சுமையும் அதிகமாகும்

எனினும் உபய லக்ன கன்னி ஜாதகர்கள் வெற்றி பெறுதல் சமூகத்தில் குறைவே!




நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com